விலை ரூபா: 10.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 18 | சனிக்கிழமை (03.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 349

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று பரவலாக கைக்குண்டுவீச்சு; சூடு!

## சாவகச்சேரியில் பதற்றம்

(பிரதேச, அலுவலகச் செய்தியாளர்கள்)

**யாழ். குடாநாட்டில் நேற்றுப் பரவலாக இராணுவத்தினரின் காவல்நிலையங்களின் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது. இதனால் குடாநாட்டின் பல பகுதிகளில் பெரும் பரபரப்பும், அச்சநிலையும் காணப்பட்டது.**

யாழ். குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற ஹர்த்தால் கதவடைப்பினால் குடாநாடே ஸ்தம்பித்திருந்த நிலையில் இத் தாக்குதல் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றதனால் பெரும் பரபரப்புடன் கலந்த அச்சநிலை நீடித்தது. இத்தாக்குதல் சம்பவத்தில் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் ஒட்டுமொத்தமாக ஏழுபடையினருக்கு மேல் காயமடைந்திருக்கலாமெனத் தெரியவருகிறது.

இதேவேளை படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி படுகொலைச் சம்பவம்
## கண்காணிப்புக்குழுவிற்கு இளம்பரிதி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

நீர்வேலியில் இரண்டு இளைஞர்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பண்ணைப் பாலத்தில் ஆட்டோ – பிக்கப் விபத்து
## ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப்பாலத்தில் நேற்றுமாலை 5,30 மணியளவில் இடம்பெற்ற வீதிவிபத்தொன்றில் 5 பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாலப்பகுதியில் முச்சக்கரவண்டியும், ஈ.பி.டி.பியினரின் பிக்கப் வாகனமும் மோதுண்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த இந்த ஐந்துபேரும் மரண வீடொன்றுக்குச் செல்லும் வழியிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் தணியல் லூட்ஸ் (வயது 63), எஸ்.கிளி (வயது46), ரி.உதயகுமார் (வயது 34), கே.அன்னைமேரி (வயது 52), எஸ்.றோஸ்வலின் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-4)

## பூரண ஹர்த்தாலால் நேற்று குடாநாடு முற்றாக ஸ்தம்பிதம்





(யாழ்ப்பாணம்)

**நீர்வேலிப்பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு பொதுமக்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ். குடாநாட்டில் முழு அளவிலான கடையடைப்பும் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் யாழ். குடாநாடு முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது.**

**நேற்று முன்தினம் நீர்வேலியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் இக் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.**

**இக் ஹர்த்தால் காரணமாக பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து** (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வருடம் பெல்ஜியத்தில் உதவும் நாடுகளின் கூட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் பெல்ஜியம் நாட்டின் பிரெஸெல்ஸில் நடைபெற உள்ளது. ஜப்பானின் விசேடப் பிரதிநிதி யகூசிஅகாசி, நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்மும், அமெரிக்காவின் சார்பில் அதன் இராஜாங்க திணைக்களத்தின் தென் கிழக்காசியாவிற்கான பிரதிநிதி, ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் அதற்குத் தலைமை தாங்கும் இங்கிலாந்தின் பிரதிநிதி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் ஒருவர் பங்கேற்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது. சமாதான நடவடிக்கைகளை மீண்டும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பேரவையினருக்கு இராணுவத்தினர் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை அலுவலகத்துக்குள் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் அத்துமீறி நுழைய முற்பட்டதுடன், பேரவை மாணவர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுக்காலை மாணவர்பேரவை அலுவலகத்திற்கு முன்பாக இராணுவத்தினர் திரண்டு அச்சுறுத்தி பயமுறுத்தும் வகையில் செயற்பட்டனர்.

இதனையடுத்து அப்பகுதியில் திரண்ட பல்கலைக்கழக மாணவர்களும், பொதுமக்களும் இராணுவத்தினரின் அத்துமீறிய நடவடிக்கைக்கு தமது பலமான எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் அவ்விடத்தைவிட்டு அகன்று முகாமிற்குச் சென்றனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை அலுவலகத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

(இ-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்களைச் சீண்டிப்பார்க்காதீர்கள் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

மக்களை சீண்டிப்பார்க்க நினைக்காதீர்கள்...! இவ்வாறு நீர்வேலிப் பகுதியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற அப்பாவி மக்களுடைய படுகொலைகளைக் கண்டித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த கண்டன அறிக்கையிலேயேதெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தமிழீழத்தின் பிறமாவட்டங்களில் இராணுவத்தினராலும் ,இராணுவத்தின் பிற ஏவல்படையினராலும் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளும் வன்முறைச்சம்பவங்களும் தற்போது யாழ்.குடாநாட்டில் என்றுமில்லாதவாறு கடந்த சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னதாக உச்சங்கொண்டிருப்பதை காணமுடிகிறது.

இவ்வாறான சம்பவங்கள் கடந்த வாரத்தில் மாவீரர் நிகழ்வு நாட்களில் பொதுமக்களை வன்முறைக்கு இழுக்கின்ற கோழைத்தனமானசெயற்பாட்டையும்,அப்பாவிப் பொதுமக்களை தீவுப் பகுதிகளில் முக்கியமாக நெடுந்தீவு,மண்டைதீவு போன்ற பகுதிகளில் மக்களை அச்சுறுத்துவதும் கைதுசெய்வது போன்ற வேலைகளில் ஈடுபடுவதும் இரவு வேளைகளில் மோட்டார் வாகனங்களில் திரிந்து அச்சமூட்டுவதும் பகல் வேளைகளில் அப்பாவிப்பொதுமக்களை ஆயுதங்காட்டி மிரட்டு வதும் ,அடிப்பதும் போன்ற நிலைகளைக் கடந்து இராணுவப்படையினர் என்றுமில்லாதவாறு ரோந்து செல்லும் போது சிறியவர் முதல் பெரியவர்வரை இச்சமாதான காலப்பகுதியிலும் கூட அச்சுறுத்தப்படுகின்ற நிலை எங்கும் அதிகரித்துள்ளதை காண முடிகின்றது.

மக்களுடைய உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் இவ்வாறான செயற்பாடுகளினால் அடக்கிவிடமுடியாது என்பதை கூறிக் கொள்ளவிருப்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள்,போராளிகள் கல்விமான்கள் ஏன்போர் மீது திணிக்கப்பட்ட நச்சுவட்டம் தற்போது படிப்படியாக ஏதுமறியாத அப்பாவிப்பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுவதை தொடர்ந்து யாழ்.மாவட்ட பொதுமக்கள் பொறுமையாக பொறுத்திருப்பர் என்று கூறிக்கொள்ளமுடியாது.

என்னும் தேசியத்தலைவருடைய வழிகாட்டலில் அவருடைய கருத்துக்கு கட்டுப்பட்டு பொது மக்களும் போராளிகளும் சமாதானத்துக்காக திறந்தமனதுடன் காத்திருக்கின்ற இவ்வேளையில் இராணுவமும், கூலிப்படையினரும் செய்கின்ற இந்த ஈனத்தன செயல் கையாலாகாத செயற்பாடாக இருக்கின்றது.

தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் காணப்படுமாயின் தக்கநேரத்தில் தக்க தருணத்தில் எங்களுடைய மக்கள் அதற்கான தகுந்த மாற்றீட்டினை செய்யவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

நேற்று முன்தினம் நிகழ்ந்த அப்பாவிப்பொதுமக்களுடைய படுகொலைகளைக் கண்டிக்கும் அதேவேளை அம்மக்களுடைய துக்க நிகழ்வுகளிலும் யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்கள் ஒன்றியமாகிய நாம்பங்கேற்கின்றோம்.

அத்துடன் படுகொலை செய்யப்பட்டவர்களுடைய குடுப்பங்களுடன் பொதுமக்களும் இணைந்து அவர்களுடைய துக்கத்தில் பங்கேற்பதுடன் பொதுமக்களும் விழிப்புடன் இருக்கும் வண்ணமும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# நீர்வேலிச் சம்பவத்திற்கு ஈழவேந்தன் கண்டனம்

நாம் ஏங்கும் அளவிற்கு தமிழீழ மண்ணில் இராணுவத்தினதும் அவர்களுக்குப் பக்கதுணையான ஆயுதக்குழுக்களினதும் துப்பாக்கிச் சூடும் வெறியாட்டமும் தொடர்கிறது உடன் நிறுத்தப்படாவிடின் எம் மண்ணிலேயே நாம் வேரோடு சாய்க்கப்படுவது உறுதி என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

எங்கள் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எல்லை மீறிப்பொறுமை காத்த நிலையில் எவரையும் புண்படுத்தாது அனைவரையும் பண்படுத்தி ஆட்கொள்ளுகின்ற முறையில் சென்ற 27.11.2005 இல் நிகழ்த்திய மாவீரர் உரையில் ,சிங்களத் தலைமைப் பீடத்திடம் மனமாற்றம் காணவில்லை.

எனின் அடுத்த ஆண்டே நாம் களத்தில் குதிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றோம் என்று எச்சரித்த நிலையிலும் யாழ்.மண்ணிலும் ,மட்டக்களப்பு மண்ணிலும் ,திருமலை மண்ணிலும் பக்கதுணையாக எம் இனத்தை காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளஆயுதக்குழுக்களின் அட்டகாசமும் தொடர்கிறது.

சிங்களப்படைக்கு ஆயுதக் குழுக்கள் துணை நிற்கின்றனவா அல்லது ஆயுதப்படைக்கு சிங்களக்குழுக்கள் துணைநிற்கின்றனவா என்ற ஆய்வு இங்கு தேவையில்லை.

இவ்விரு பகுதியினரும் கைகோர்த்துக் கொண்டுதான் இவ் வெறியாட்டம் ஆடுகின்றனர். மட்டக்களப்பில் கருணா குழு செயற்படும் போக்கு எம் ஐயத்தை உறுதிப்படுத்துகின்றது.

சில வாரங்களுக்கு முன் புத்தூரில் ஒரு இளம் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்க இராணுவம் முனைந்துபோது மக்கள் கொதித்தெழுந்ததன் விளைவாக தோல்வி கண்ட சிங்கள இராணுவம் அங்கிருந்த பொது மக்களைத் தாக்கியதன் காரணமாக அம் மண்ணில் இருந்தே அவ்வூர் மக்கள் வெளியேறும் நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

ஒரு இளைஞன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானான் மற்றும் பலர் படுகாயமுற்ற நிலையில் யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நடந்த வெறியாட்டத்தை கண்டித்து நாம் போர்க்கோலம் பூண்டு அறிக்கைகள் விடுத்ததோடு நாடாளுமன்றத்திலும் இப்பிரச்சினையின் விளைவை புட்டுக்காட்டி உரைநிகழ்த்தினோம்.

யாழ்.படைத்தளபதி சுனில் தென்னக்கோனோடும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையைக் கட்டுப்படுத்துங்கள் என்று வேண்டுகோள் விடுத்தோம்.

எம்மைப் பொறுத்தவரையில் குடியரசுத் தலைவர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டதோடு கொழும்பில் உள்ள இராணுவத் தலைமைப் பீடத்திற்கு இத்தகைய வெறியாட்டம் தொடரின் நாமோ அரசோ விரும்பாத விளைவுகள் ஏற்படுத்தும் என்றும் எச்சரித்தோம்.

எம் வேண்டுகோள் முற்றாக புறக்கணித்த நிலையில் நீங்கள் யார் எங்களுக்கு அறிவுரை கூறுவதென்று சொல்வதுபோல் சில வாரங்களுக்கு முன் நடைபெற்ற வெறியாட்டத்தின் தொடர்ச்சியாக வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர் ஒருவர் காயமடைந்தார். இத்துயர் தோய்ந்த செய்தி பல திசைகளில் இருந்தும் எமக்குக்கிடைத்தது.

அத்தோடு யாழ்.மருத்துவமனைத் தலைமைப்பீடம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்து படைத்தளபதி சுனில்தென்னக்கோனுடமும் பல தடவை தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவர் வெளியில் சென்றுவிட்டார் விரைவில் திரும்பிவிடுவார் என்று பதில் கிடைத்தது.

படைத்தளபதியுடன் பேசுவதால் பிரச்சினை தீரப்போவதில்லை என்பது எமக்குத்தெரியும். சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவகத்தில் படைத்தளபதி தென்னக்கோனைச் சந்தித்து நீண்ட உரையாடல் நடத்திய போதும் எதுவித பயனுள்ள முடிபுகள் எதுவும் கிடைக்கவில்லை.

தமிழீழ மண்ணில் பலோத்காரமாக குடிகொண்டு எம்மைத் தாக்குகின்ற படையாகிய சிங்களப்படை இங்கு இருக்கும் வரை அவர்களுக்கு பக்கத்துணையாக ஆயுதக்குழுக்கள் இயங்கும் வரை எமக்கு விடிவும் இல்லை விமோசனமும் இல்லை.

எம்மை எதிர்நோக்குகின்ற அனைத்து சிக்கல்களுக்கும் ஒரே மருந்து சிங்களப்படை எம் மண்ணில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என ஈழவேந்தன் எம்.பி தனது அறிக் கையில் குறிப்பிட்டுள்ளார். (இ)





விவசாய இரசாயனங்களின் விளைவினால் புற்றுநோய் என்னும் தலைப்பில் கடந்த 29ஆம் திகதி விவசாய பீடத்தின் பிரதான மண்டபத்தில் சிறப்புரை ஒன்று நடைபெற்றது. இதனை புற்றுநோயியல் ஆலோசனை நிபுணர் வைத்திய கலாநிதி ந.ஜெயகுமாரன் நிகழ்த்தினார். இதில் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள்,விவசாயிகள் மற்றும் விவசாய அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் பங்குபற்றினர். இந்நிகழ்விற்கு விவசாய பீடத்தின் உயிரியல்துறை தலைவர் கலாநிதி கு.முகுந்தன் தலைமை தாங்கினார். (இ-12)

# கதிர்காமரின் இடத்திற்கு றெஜினோல்ட் கூரே?

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் காதிர்காமரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மேல்மாகாண சபையின் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேயை நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க இந்த பரிந்துரையை மேற்கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

முன்னர் சந்திரிகா குமாரதுங்க தமது பேரை குறித்த நாடாளுமன்ற வெற்றிடத்திற்கு நிரப்ப விரும்பம் கொண்டிந்தார். எனினும் பின்னர் அந்தத்தீர்மானத்தில் அவர் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டார்.

இந்த நிலையில் விரைவில் நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தப் பரிந்துரையை சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டயஸ அழகபெருமாலை குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு நிமியக்கும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். (த-9)

# மக்கள் வங்கி இன்று திறந்திருக்கும்

ஹர்த்தால் காரணமாக நேற்றையதினம் மூடப்பட்டிருந்த யாழ்ப்பாண மக்கள் வங்கி, இன்றைய தினம் வழமையான அலுவல்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும் எனவும்,

இன்று பொதுமக்கள், மக்கள் வங்கியுடன் தமது வழமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (த)

# ஆயுதப் போரில் ஓவியம் தாங்கும் புகழேந்தி

## ஓவியநூல் வெளியீட்டு விழாவில் புகழுரை

(யாழ்ப்பாணம்)

ஓவியர் புகழேந்தியின் புயலின் நிறங்கள் ஈழப்போர் வரலாற்றுப் பதிவு ஓவியநூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் கைலாசபதி கலையரங்கில் யாழ்.பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் விஜயரூபன் தலைமையில் நடைபெற்றது. செல்வி யாழினி வரவேற்புரையையும் யாழ்.பல்கலைகழகத் துணைவேந்தர் மோகனதாஸ் வாழ்த்துரையையும் வழங்க நூல் வெளியீட்டுரையை நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் நிகழ்த்தினார்.

ஈழப்போர் வரலாற்றினை ஓவியமாக "புயலின் நிறங்கள்" என்ற தலைப்பில் ஓவியர் புகழேந்தி வரைந்துள்ளார் என்று தன் வெளியீட்டுரையில் குறிப்பிட்ட மா.க.ஈழவேந்தன் "இரத்தம் தோய்ந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பல்வேறு இன்னல்களையும், துயரங்களையும், அடக்கு முறைகளையும் சந்தித்திருக்கிறார்கள் சொந்த மண்ணைத் துறந்து சொந்த மக்களை இழந்து, பல்வேறு நாடுகளில் புலம் பெயர்ந்து ஏதிலிகளாக வாழும் நிலை.

இவைகளை எல்லாம் என்னுள் ஏற்படுத்திய அழுத்தம்- அந்த அழுத்தத்தினால் ஏற்பட்ட வீச்சுக்களை நிறங்களில் ஓவியங்களாக வெளிப்படுத்தி இருக்கிறேன்' என்ற ஓவியர் புகழேந்தியின் கூற்று அவருடைய ஓவிய ஆற்றலை எடுத்துக் காட்டுவது ஒரு புறம் இருக்க அவர் ஈழத்தமிழருடைய இன்னல்களுடன் எவ்வளவு தூரம் ஒன்றியுள்ளார். என்பதையும் எடுத்துக்காட்டுகிறது என்றார்.

ஈழவேந்தன் தொடர்ந்து பேசுகையில் புகழேந்தியின் ஓவியம் மயக்கப்பிறந்த மொனாலிசா அல்ல மக்களை இயக்கப்பிறந்த சிலுவைக்காட்சி சிதைக்கப்பட்ட யாழ்.நூலகம் சினம் கொண்ட ஓவியமாக சிலிர்க்கிறது என்று கூறியதோடு வெலிகடைச் சிறைச்சாலையில் பிடுங்கப்பட்ட குட்டிமணியின் கண்களை உலகின் கண்கள்முன் வெளிச்சத்தில் வைக்கிறார்.

புகழேந்தியின் ஓவியங்கள் நிறங்களின் சோடிப்பு அல்ல. நிறங்களின் சூறாவளி என்று புகழேந்தியின் புகழைக் காசி ஆனந்தன் குறிப்பிடுவது ஒரு வெற்றுரையோ புகழுரையோ அல்லமாறாக பொருள் பொதிந்த பொன்னுரையாகும். என்றார்.

ஈழவேந்தன் தனது வெளியீட்டுரையில் காலத்தின் அருமை கருதி பழநெடுமாறன், வை.கோ போன்ற தமிழக அரசியல் தலைவர்கள் எவ்வளவு தூரம் புகழேந்தியின் நுன்மான நுழைபுலத்தை உணர்ந்து போற்றுகின்றனர் என்பதை தன்னுரையில் சுருக்கி விளக்கினார். ஈழவேந்தன் தன் உரையின் இறுதியில் வெண்பாவிற்கு புகழேந்தி என்று அன்று தமிழ் இலக்கிய உலகம் பேசியது இன்று ஓவியத்திற்கு புகழேந்தி என்று தமிழ் ஓவிய உலகம் அவரை வாழ்த்துகிறது. உலகக் கணிப்பில் மறுமலர்ச்சி ஓவியர்களாகிய லியனாடோ டாவின்சியையும், மைக்கல் அஞ்சலோவையும் ஓவிய உலகம் உச்சிமீது வைத்து உவந்து போற்றுகிறது. 39 வயதையுடைய ஓவியர் புகழேந்தி அடுத்தடுத்து ஈட்டப் போகின்ற வெற்றிகள். மேற்குறித்த ஓவயப் பெருந்தகைகள் வரிசையில் இவருக்கும் இடமளிக்கும் எனத் தெரிவித்தார். (த)

# இனப் பிரச்சினைதீர்வு விடயத்தில் வெளிநாடுகளின் தலையீட்டிற்கு எதிர்ப்பு

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் வெளிநாடுகள் தலையிடுவதை தமது கட்சி எதிர்ப்பதாக ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்கா ஜயசூரியா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே சிறிதுங்கா ஜயசூரியா இதனைத் தெரிவித்துள்ளார்.

மார்க்ஸிஸவாதிகள் என்ற அடிப்படையில் நோர்வே நாடோ, அல்லது அயல்நடான இந்தியாவோ அல்லது பிடல் காய்ரோவோ ஏற்பாட்டாளராக வரவேண்டுமென நாம் விரும்பவும் இல்லை அதற்காக போராடப் போவதும் இல்லை மார்க்ஸிஸ வாதிகள் என்ற அடிப்படையில் எந்தவிதத்திலும் வெளிநாடுகள் தலையிடுவதை ஐக்கியசோசலிசக்கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் எதிர்க்கின்றன. இதுவே எமது நிலைப்பாடு மற்றவரின் தலையீடு இன்றிப் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் முதலாளித்துவர்களின் இவ்வாறான தலையீட்டினாலேயே தான் இன்று பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும் மேலும் அவர் தெரிவித்தார். (த-8)

# வேள்ட் விஷன் அனுசரணையில் தென்னங் கன்றுகள் விநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சிக்கு மருதங் கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் 2 ஆயிரத்து 500 தென்னங்கன்றுகளை விநியோகிக்க உலக தரிசன நிறுவகம் (வேள்ட் விஷன்) முன்வந்துள்ளது.

இதற்காக கிராம சேவகர்கள் மூலம் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணி முடிவுற்று கிராம சேவகர் அலுவலர்கள் பயனாளிகளின் பட்டியல் உலகதரிசன நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள குடத்தனை, மணற்காடு, அம்பன், நாகர்கோவில் ஆகிய பகுதிகளுக்கு பத்தாயிரம் தென்னங்கன்றுகளும் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளான செம்பியன்பற்று, தாளையடி,வத்திராயன், ஆழியவளை, மருதங்கேணி, உடுத்துறை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளுக்கு பதினையாயிரம் தென்னங்கன்றுகளும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. (த-35)

# இராசி பலன்

03.12.2005

(கார்த்திகை 18, சனிக்கிழமை)

துதியை முன்னிரவு 6.20 மணிவரை

மூலம் முன்னிரவு 9.48 மணிவரை

இராகுகாலம் 9.15-10.45 மணிவரை

சுபநேரம் 3.15-4.45 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், காரிய தாமதம், கட்டுப்பாடு, பிரயாணம். |
| இடபம் | அபகீர்த்தி, முயற்சி தடங்கல், ஆரோக்கியக் குறைவு, பணக்குறைவு. |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் சநதிப்பு, போசன நன்மை, தொழில் நனமை. |
| கடகம் | ஆரோக்கிய நிலை, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, அதிகாரம். |
| சிங்கம் | மனச்சஞ்சலம், காரிய தாமதம், பணக் குறைவு, குடும்பக் கவலை. |
| கன்னி | மாதா சுகம், சுப செலவு, எடுத்த காரியம் தாமதமாகும், திடீர் நன்மை, மனச் சோர்வு. |
| துலாம் | அந்நியர் சந்திப்பு, போசன சுகம், காரிய அனுகூலம், பிரயாண நன்மை. |
| விருச்சிகம் | கடின வார்த்தை, தன விரயம், முயற்சி தாமதம், உஷ்ண நிலை. |
| தனுசு | கற்பனை மிகுதி, சுப செய்தி, விருந்துபசாரம், உறவினர் சந்திப்பு. |
| மகரம் | நித்திரைக் குறைவு, எதிர்பாராத நன்மை, பிரயாணம், சுப செலவு. |
| கும்பம் | குடும்ப சுகம், தெய்வ சிந்தை, போசன சுகம், காரிய அனுகூலம். |
| மீனம் | கடின உழைப்பு, பிறர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# சந்திரிகா பாராளுமன்ற உறுப்பினரானால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவுபடும்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வர ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு இடமளிக்காது என தான் நம்புவதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளே தெரிவித்துள்ளார்.

தனது பிள்ளைகளை ஒருபோதும் அரசியலுக்கு வர இடம் தரமாட்டேன் என முன்னர் கூறிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக வர கடும் முயற்சிகளை மேற்கொள்வது பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஐக்கியத்தை இரண்டாகப் பிளவு படுத்த காரணமாக அமைந்துவிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எக்காரணத்தைக் கொண்டாவது சந்திரிகா குமாரதுங்க மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வந்தால் அது கட்சியின் பலம் இரண்டாக உடையவே வழிவகுக்கும். இதன்மூலம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பாதகமான விளைவுகள் ஏற்படும். எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்தியகுழு எக்காரணம் கொண்டும் இதற்கு அனுமதி அளிக்கக்கூடாது எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

# அமைச்சரின் ஒருநாள் செலவு ஆயிரம் அமெரிக்க டொலர்

(கொழும்பு)

இந்தியாவில் நடைபெறுகின்ற பொருளாதார மாநாட்டில் பங்கேற்கச்சென்ற தொழில் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் ரோகித போகல்லகமவின் ஒருநாள் செலவு மட்டும் ஆயிரம் அமெரிக்க டொலர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


ரோகித போகல்லகமவுடன் அவரது குடும்பத்தினரும் இரு நண்பர்களும் இந்தியா சென்றுள்ளனர். புதுடில்லியின் மிக ஆடம்பரமான தாஜ்பேலஸ் நட்சத்திர விடுதியில் இவர்கள் தங்கினர்.

இவர்களது ஒருநாள் செலவு மட்டும் 1,000 அமெரிக்க டொலர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று நாள் மாநாட்டையொட்டி பெங்களுருக்குச் சென்ற இவர்கள் அங்கேயும் மிக ஆடம்பரமான நட்சத்திர விடுதியிலேயே தங்கியிருந்துள்ளனர். இதற்கான செலவை சிறிலங்காவின் முதலீட்டுச்சபையே செலுத்தியுள்ளது.

இலங்கை ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்றவுடன் வெளிநாடு சென்ற முதல் அமைச்சர் ரோகித போகல்லகம என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)





நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற வடமராட்சி தென்மராட்சி அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி ரா.மாலதி மங்கள விளக்கேற்றுவதையும், யாழ்.மாவட்ட இந்து கலாசார அமைச்சர் இணைப்பாளர் க.நாகராஜா அருகில் நிற்பதை முதலாவது படத்திலும், இந்நிகழ்வில் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டவர்களை இண்டாவது படத்திலும் காணலாம். (132/133)

## இன்று ஒரு தகவல்

## அறிவுள்ள கருணை

இந்த உலகத்தில் கருணை காட்டவேண்டிது மிகவும் அவசியம் தான் சார்! இருந்தாலும் எல்லோரிடமும் கருணை காட்டிக் கொண்டிருக்கமுடியாது.அப்படிக் காட்டிக் கொண்டிருந்தால் நமது பாடு ஆபத்து. ஒரு வெறிநாய் உங்களைக் கடிக்க வந்தால் ஐயோ பாவம் நாய்தானே...கடித்துவிட்டுப் போகட்டும் என்று காலைக் காட்டிக் கொண்டிருப்பீர்கள். அறிவு வேலை செய்ய வேண்டும். அதற்குப் பின்புதான் கருணை காட்டுவதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

ஒரு பெரியவர் வெளியூர் போய் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். இருட்டிவிட்டது. ஒரு அடர்ந்த காட்டின் வழியே தலையில் மூட்டையோடு நடந்துவந்து கொண்டிருந்தார். புதர் மறைவில் இருந்த புலி ஒன்று இவரைப் பார்த்துவிட்டது. உடனே இவர் மேல் பாய்வதற்காக ஓடி வந்தது. பெரியவர் பார்த்தார். என்ன செய்வதென்றே தெரியவில்லை... ஓடிப்போய் ஒரு மரத்திற்குப் பின்னால் மறைந்துநின்று கொண்டார்.

அந்தப் புலி ஓடிப்போய் அந்த மரத்திற்கு முன்புறமாகப் போய் நின்றது! அந்தப் பக்கம் அவர்.இந்தப் பக்கம் புலி. நடுவில் மரம். புலி நிமிர்ந்து நின்று முன்னங்கால் இரண்டையும் மரத்திற்கு இரண்டு பக்கமாகவும் நீட்டியது. அந்தப் பக்கம் நின்று கொண்டிருந்த பெரியவர் அந்த இரண்டு முன்னங்காலையும் இரண்டு கையாலும் கப்பென்று கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். நடுவில் மரம். புலியும் அந்தப் பெரியவரும் மரத்தை சுற்றிச்சுற்றி வருகிறார்கள். பெரியவர் பிடித்த பிடியை விடவில்லை. விட்டுவிட்டால் புலி அருகில் வந்துவிடும். அதனால் விடாமல் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தார். கையெல்லாம் வலிக்க ஆரம்பித்தது. என்ன செய்வது. எப்படித் தப்பிப்பது என்று ஒன்றும் புரியவில்லை.

அந்த நேரம்பார்த்து அந்த வழியாக ஒரு ஆள் வந்தான். அவனது கையில் ஒரு துப்பாக்கி இருந்தது. துப்பாக்கியுடன் அந்த ஆள் வருவதைப் பார்த்ததும் நமது பெரியவர் மிக்க நிம்மதியுடன் மூச்சு விட்டார். இனிமேல் எப்படியும் பிழைத்துக்கொள்ளலாம் என்ற தைரியம் அவருக்கு. "சீக்கிரமாக இங்கே வா'' என்று அந்த ஆளைப் பார்த்துக் கூப்பிட்டார். அவனும் வந்தான். ''இதோ பாரப்பா... இந்தப் புலியை உன் துப்பாக்கியால் சுட்டுவிடு'' என்றார்.

அந்த ஆள் ஜீவகாருண்யம் பேச ஆரம்பித்துவிட்டான்.'' பெரியவரே! புலியும் ஓர் உயிர். நீயும் ஓர் உயிர்! ஜீவனுக்குக் கருணை காட்டுபவன் நான்! அதனால் நான் புலியைச் சுடமாட்டேன்!'' என்று கூறிவிட்டான். "அப்படி இல்லை அப்பா...புலி ஒரு மிருகம்... ஆனால் நான் மனிதன்! புலி பலபேரைக் கொல்லக் கூடிய பிராணி! நான் பலருக்கு உதவி செய்யக்கூடிய மனிதன். என்னை நம்பி வீட்டில் மனைவி. மக்களெல்லாம் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த விலங்கை நீ கொன்றுவிடு. ஆறறிவு படைத்த மனிதனும் ஐந்தறிவு படைத்த மிருகமும் ஒன்றா? எது உயர்வு? எது தாழ்வு என்று பகுத்தறிவினால் பார்க்கவேண்டாமா? ஆபத்து வேளையில் எனக்கு நீ உதவிசெய்! அதுதான் நியாயம்'' என்றார் பெரியவர்.

"அதெல்லாம் முடியாது. நான் எப்போதும் அறநெறியை வீட்டு விலகமாட்டேன். புலிக்கும் உயிர்வாழ வேண்டும் என்ற ஆசை உண்டு. அதனால் ஒரு உயிருக்காக இன்னொரு உயிரைக் கொல்லமாட்டேன்" என்று விட்டான் அந்த ஆள். பெரியவர் யோசித்தார். "சரி! நீ புலியைக் கொல்ல வேண்டாம். எனக்கு ஒரு உதவியாவது செய்'' என்றார். "அதைச் செய்கிறேன். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்'' என்றான். "தண்ணீர் குடிக்கவேண்டும் போலிருக்கிறது. அதனால் கொஞ்சநேரம் இந்தப் புலியின் காலை எனக்குப் பதிலாகப் பிடித்துக்கொள். நான் போய்விட்டு வருகிறேன்'' என்றார். அவனும் துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு சரி என்று சொல்லி அது போலவே பிடித்துக் கொண்டான். பெரியவர் போய்விட்டு வந்தார். வந்தவர் மூட்டையைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தார். அந்த ஆளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

''என்ன இது... என்னை இப்படி விட்டுவிட்டு வீட்டுக்கு நடையைக் கட்டுகிறீர்களே. இது நியாயமா?''என்று கேட்டான். "எனக்கு இன்னும் கொஞ்சம் கடமைகள் இருக்கின்றன. அவற்றை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார். இவன் பரிதாபமாக கெஞ்ச ஆரம்பித்தான்.''ஐயா எங்கள் வீட்டில் மனைவி, பிள்ளைகளெல்லாம் எனக்காகக் காத்திருப்பார்கள். இந்தத் துப்பாக்கியை எடுத்து புலியை சுட்டு விடுங்கள் பெரியவரே'' என்றும் கேட்டுக்கொண்டான்.

பெரியவர் பார்த்தார். "இப்போது தான் உனக்கு நியாயம் எதுவென்று புரிந்திருக்கிறது. புலியைவிட நீ உயர்ந்தவன். நீ வாழ்ந்தால் எத்தனையோ பேருக்கு உதவியாக இருப்பாய். அது வாழ்ந்தால் பலருக்குக் கெடுதல் செய்யும். அதனால் நீதான் வாழவேண்டும். ஆனால் எனக்கு சுடத் தெரியாது. அதனால் நான் புலியின் கையை அதாவது முன்னங்காலைப் பிடித்துக் கொள்கிறேன்.நீ புலியைச் சுடு''என்றார். உடனே அந்தப் பெரியர் மூட்டையைக் கீழே வைத்துவிட்டு புலியைப் பிடித்துக்கொண்டார். அந்த ஆள் அந்த மிருகத்தைக் கொன்றான். மனிதனைக் காப்பாற்றினான். இதுதான் அறிவுள்ள கருணை என்பது.

அறிவைப் பயன்படுத்தாமல் கருணை காட்டினால் அது ஆபத்தில் தான் முடியும். நமது ஆட்கள் கருணை காட்டுவதில் எத்தனையோ ரகம் இருக்கிறது. அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு ஆள் குளத்தில் விழுந்துவிட்டார். நீச்சல் தெரியாது. தத்தளித்துக்கொண்டிருந்தார். இன்னொரு ஆள் அதைப் பார்த்து இரக்கப்பட்டார். உடனே தண்ணீரில் குதித்து அவரைக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்டார்.''என்னைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி! உங்களது ஜீவகாருண்யத்தைப் பாராட்டி 50 சதம் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபா தான் இருக்கிறது. அதுதான் என்ன செய்யலாம்? என்று யோசிக்கிறேன்''என்றார் அவர்.

அதற்கு இவர் ''அப்படியென்றால் இன்னொரு முறை இந்தக் குளத்தில் விழுங்கள்...காப்பாற்றி விடுகிறேன்! ஒரு ரூபாயாகக் கொடுததுவிடுங்கள்''என்றார்.இந்தக் கருணையை எந்த ரகத்தில் சேர்ப்பது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தமிழர்களின் அபிலாஷைகளைப் புரிந்துகொள்ள சர்வதேச சமூகம் தவறிவிட்டது -மலேசியப் பேராசிரியர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளைக் குற்றம்சாட்டுவது, தடைசெய்வது போன்ற விடயங்களில் அக்கறை செலுத்துகின்ற சர்வதேச சமூகம் தமிழர்களது அபிலாஷைகளையும் மனக்குறைகளையும் புரிந்துகொள்ளவில்லை என்று மலேசிய பேராசிரியர் ராமசாமி தெரிவித்துள்ளார்.கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே பேராசிரியர் ராமசாமி இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைமை சர்வதேச சமூகத்தின் மீது மிகவும் ஏமாற்றமடைந்துள்ளது. தமிழ் மக்களின் தேவைகளையும் மனக்குறைகளையும் புரிந்துகொள்ள சர்வதேச சமூகம் முயற்சிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் சர்வதேச சமூகம் குறித்து ஏமாற்றமடைந்திருக்கிறார்.

அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைச் செலுத்தத் தவறும் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டுவது,அவர்களைத் தடைசெய்வது போன்ற விடயங்களில் அதிக அக்கறை செலுத்துகின்றன.

தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய சர்வதேச சமூகம் தவறியமைக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை,ஆழிப்பேரலை நிவாரணசபை ஆகியவை முடக்கப்பட்ட சம்பவங்களே சிறந்த உதாரணங்கள்.தமிழர்கள் தங்களின் தேவைகளுக்ேற்ப செயற்படவும் நம்பிக்கை கொள்ளவும் வேண்டும் என்பது தான் பிரபாகரனின் உரையில் கூறப்பட்டுள்ளது.

சுதந்திரமும் நீதியும் அடுத்தவரைச் சார்ந்திருந்தால் கிடைக்காது. இதனை இன்னொரு வார்த்தையில் கூறுவதாயின் சிறிலங்கா அரசாங்கத்தையோ சர்வதேச சமூகத்தையோ சார்ந்திருந்து தமிழ் மக்கள் நேரத்தை விரயம் செய்வதை நிறுத்த வேண்டும். இவையிரண்டும் தமிழ் மக்கள் குறித்து அக்கறை காண்பிக்கப் போவதில்லை என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (த-4)

## பால்மா விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இரண்டு வகையான பால்மா பக்கற்றுக்களின் விலை அதிகரிக்கப்படவுள்ளது இதனடிப்படையில் 400 கிராம் நெஸ்பிறே பால்மா பக்கெற் ஒன்று 8.50 ரூபாவினாலும் கெரிகோல்ட் பால்மா பக்கெற் ஒன்று 32.25 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேபோன்று 158 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் 400கிராம் நெஸ்பிறே பால்மா பக்கெற் இனி 166.50 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும்.

அத்தோடு குழந்தைகளுக்கான கெரிகோல்ட் பால்மா பக்கெற்றும் இனி அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்யப்படும். நெஸ்பிறே பால்மாவின் உற்பத்தி செலவினமும் கெரிகோல்ட் பால்மாவின் இறக்குமதி செலவினமும் அதிகரித்ததாலேயே இவ்விரு பால்மா பக்கெற்களினதும் விலை அதிகரிக்கப்படுவதாக நுகர்வோர் அதிகாரசபை அதிகாரி தெரிவித்துள்ளார். (த-9)

## பிரபாகரனின் வேண்டுகோளை நிராகரித்தது அரசாங்கம்!

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்கு குறுகியகால இடைவெளியில் அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்திருந்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அரசியல் யாப்பு அமைச்சர் டி.ஈ.டபிள்யூ.குணசேகர இதனைத் தெரிவித்தார். இதுபோன்ற காலக்கெடுவிற்கெல்லாம் அரசாங்கம் எதிர்வினையாற்ற முடியாது. இந்த செயற்பாடுகளை எல்லாம் அவசரமாகவும் செய்யமுடியாது.ஒரே இரவில் எல்லாவற்றையும் நீங்கள் செய்துவிட முடியாது.

இருந்தபோதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரையில் சாதகமான அம்சங்கள் உள்ளன. விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுகள் நடாத்துவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை அரசாங்கம் நடத்தவுள்ளது எனத் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசியல் தீர்வை மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் குறுகிய கால இடைவெளிக்குள் முன்வைக்க வேண்டும் என்றும் காலத்தை இழுத்தடித்தால் அடுத்த ஆண்டில் தமிழர் தாயகத்தில் தன்னாட்சியை நிறுவுவதற்காக தமிழ் மக்களுடன் இணைந்து சுயநிர்ணயப் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் என்றும் தனது மாவீரர் நாள் உரையில் பிரபாகரன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## சமாதான முயற்சிகள் தொடர்பில் விவாதிக்க மஹிந்த அழைத்தால் பரிசீலிப்போம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகள் தொடர்பாக விவாதிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உத்தியோகபூர்வமாக மஹிந்த ராஜபக்ஷ அழைத்தால் அது குறித்து பரிசீலிப்போம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இது குறித்துக் கூறுகையில்,

எம்முடன் பேச்சுக்கள் நடாத்துவது தொடர்பாக மஹிந்தவிடமிருந்து எதுவிதமான கடிதமும் எமக்கு வரவில்லை. ராஜபக்ஷ எமக்கு அழைப்பு விடுத்தால் நாம் கூட்டமைப்பின் மத்திய குழுவை கூட்டி அது குறித்து விவாதிப்போம். மஹிந்தவுடன் பேச்சுக்கள் நடாத்தும் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் இது தொடர்பில் ஆலோசனை நடத்துவோம்.

எம்முடனோ தமிழீழ விடுதலைப் புலிகளுடனோ எந்த அடிப்படையில் மஹிந்தராஜபக்ஷ பேச்சுக்களை நடாத்தப்போகிறார்? அண்மையில் நடைபெற்ற வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்புக் கூட்டத்தில் அமைதிப் பேச்சுக்கள் தொடர்பில் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு மஹிந்த அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் எந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்தப்போகிறார் என்பதைத் தெரிவிக்கவில்லை என்றார். (த)

## நிதி மோசடி செய்திக்கு முன்னாள் ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சட்டங்களுக்கு அமைவாகவே ஜனாதிபதி நிதியத்தில் சகல கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் நிதி முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதனைத் தெளிவுபடுத்தி முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி முழுமையாக மறுத்துள்ளதோடு குற்றச்சாட்டுக் குறித்து ஆச்சரியம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

## புலிகள் அரசாங்கத்திற்கு கட்டளையிட முடியாது -அனுர பிரியதர்சன யாப்ப

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக எங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டளையிட முடியாது என்று ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்ப தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ கூட்டியுள்ள அனைத்துக் கட்சிக் கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அனைத்துக் கட்சிகளினது ஆலோசனைகளும் கோரப்பட்டுள்ளது.

குறுகியகால இடைவெளியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று பிரபாகரன் கூறியிருக்கிறார். அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகள் கட்டளையிட முடியாது.

மஹிந்தராஜபக்ஷ குறிப்பிட்ட காலம் எடுத்துக் கொண்டு அனைத்து அரசியல் கட்சியின் யோசனைகளை ஆழ்ந்து பரிசீலித்து இறுதித் தீர்வு காண்பார். இவையெல்லாம் உடனடியாக நடைபெறாது.

எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மஹிந்தவின் கொள்கைகள் வெளிப்படுத்தப்படும் என அனுர பிரியதர்சன யாப்ப தெரிவித்தார். (த-8)

## இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா

### செவ்வாயன்று பதவியேற்பு

(கொழும்பு)

இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பதவியேற்கவுள்ளார்.

இராணுவத்தினரது ஓய்வு வயதை உயர்த்தி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிறப்பித்திருந்த வர்த்தமானி அறிவித்தலை மஹிந்த ராஜபக்ஷ அரசு இரத்துச் செய்துள்ளது.

இதனால் நவம்பர் 5ஆம் திகதியுடன் ஓய்வுபெற்று பதவி நீட்டிப்பு பெற இருந்த இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட ஓய்வுபெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இதையடுத்து புதிய இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கும் எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் 55வயது பூர்த்தியடைகிறது.


தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இரு தசாப்த கால யுத்தத்தில் முக்கிய தளபதியாக இராணுவத்தில் பணியாற்றியவர் சரத் பொன்சேகா.

இராணுவத் தளபதிகளிலேயே இவர் ஒருவர் யுத்த களத்தில் காயமடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1970ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்த இவர் யாழ்.இராணுவத் தளபதியாகப் பணியாற்றினார். இங்கிலாந்து,இந்தியா,பாகிஸ்தான், பங்களாதேஷ நாடுகளில் பயிற்சி பெற்றவர். சிறிலங்கா அரசின் உயரிய பதக்கங்களையும் பெற்றவர். (த-4)

# யாழ்.நகரில் பூரண ஹர்த்தால்

## முடக்கப்பட்ட வீதிகள்! மூடப்பட்ட கடைகள்! எரிக்கப்பட்ட ரயர்கள்!


கஸ்தூரியார் வீதியில்...


பருத்தித்துறை வீதியும் பலாலி வீதியும் இணையும் சந்தி...


திருநெல்வேலிச் சந்தி...


இணுவில் பகுதியில்...



மாசியப்பிட்டிச் சந்தியில்...


சண்டிலிப்பாய்ச் சந்தி....


மானிப்பாய் உடுவில் வீதி...


மானிப்பாய் பகுதியில்...


ஆனைக்கோட்டைப் பகுதியில்....


மக்கள் நடமாட்டமின்றிக் காணப்படும் யாழ்.நகரம்...

படங்கள்: எஸ்.ரி.ராஜா, ரி.திலீப்

# தேசவழமைச் சட்டத்தின் கீழ்

# ஆதன வழியுரிமை பெறல்- ஓர் ஆய்வு

சட்டத்தரணி
ச.சிவரூபன்

ஒரு நாட்டு மக்களை இனம்,மதம், சாதி, பால், மொழி என வேறுபடுத்தலாம். மேற்குறிப்பிட்டவர்கள் தமது இனம், மதம், மொழி, சாதி, பால் அடிப்படையில் தொன்று தொட்டு வழக்காற்று அடிப்படையில் சில கொள்கைகள் வழக்காறுகள், பழக்க வழக்கங்களை பின்பற்றுபவர்களாக இருப்பார்கள். இவ்வாறு மிகத் தொன்மையான எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், நீதி முறையின் கீழ் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், ஒரு சீர்த் தன்மை, நிச்சயத்தன்மையானதாகவும் உள்ள வழக்காறுகள், பழக்கவழக்கங்களை ஒரு மக்கள் கூட்டம் பின்பற்றுமேயானால் பிற காலத்தில் அது அவர்களின் வழக்காற்றுச் சட்டமாக அரசினால் அங்கீகரிக்கப்படலாம்.

அந்த வகையில் யாழ்ப்பாண மாகாண- அதாவது வடமாகாண தமிழர்களுக்கே உரித்தான வழக்காற்றுச் சட்டமே தேசவழமைச் சட்டம் ஆகும். இது 1806ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தேசவழமை ஒழுங்கு விதியினாலும் (Tesawalamai Regulation) பின்னர் 1911 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க யாழ்ப்பாணத்தவர் திருமண உரிமைகள் வழியுரிமைகள் கட்டளைச் சட்டம் மூலமும் பின்னர் 1947ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க யாழ்ப்பாணத்தவர் திருமண உரிமைகள் வழியுரிமைகள் கட்டளைச் சட்டம் மூலமும் (Matrimonial Rightsand Inheritance Ordinance- Jaffna) இவ் வழக்காற்று நடைமுறைகள் சட்டமாக இயற்றப்பட்டது எனலாம்.

தேசவழமைச் சட்டமானது தர்மலிங்கம் செட்டி Vs அருணாசலம் செட்டி வழக்கில் பிரதம நீதியரசர் சூட்ஸ் இலங்கை இருப்பிட உரிமையும் யாழ்ப்பாண வாசமும் கொண்ட தமிழர்களுக்கு ஏற்புடையது (Tesawalamai applies to the Tamils with Ceylon Domicile and Jaffna inhab itancy) என்றார்.

தேசவழமைச் சட்டமானது இலங்கையின் எந்தெந்த மாவட்டங்களுக்கு ஏற புடையது என்பது பற்றி பாராளுமன்ற நியதிச் சட்டத்தில் (Statutary Law) வரையறுக்கப்படவில்லை. மாறாக மேல் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புச் சட்டம் ஊடாகவே வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி மன்னார் மாவட்டத்திற்குதேசவழமைச் சட்டம் தான் ஏற்புடையது என்று மரிசால் Vs சவரி வழக்கிலும், வன்னிப் பிராந்தியத்திற்கு தேசவழமைச் சட்டம் தான் ஏற் புடையது என்று செட்டி Vs செட்டி வழக்கிலும திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடையது அல்ல என்ற தீர்ப்பு வேலுப்பிள்ளை Vs சிற்றம்பலம் வழக்கிலும், புத்தளம், சிலாபம் ஆகிய பிரதே சங்களில் வாழும் தமிழர்களுக்கு தேச வழமைச்சட்டம் ஏற்புடைய அல்ல என்று பெர்னாண்டோ Vs புறொக்ரர் வழக்குத் தீர்ப்பிலும், மலையகத்தில் வாழும் தமிழர்களுக்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடையது அல்ல என்ற தீர்ப்பு King Vs Perumal வழக்கிலும் பெறப்பட்டது.

கொழும்பிலுள்ள தமிழ் மக்களுக்கு தேசவழமைச் சட்டம் ஏற்புடையதா என்ற கேள்வி சௌந்தரநாயகம் Vs சௌந்தரநாயகம் வழக்கில் எழுந்தது. வழக்கின் விசாரணையில் (Trial) போது வாக்கு மூலத்தில் (Oral Evidence) அவர் கூறியதாவது "நான் தற்போது கொழும்பில் வசிக்கிறேன். எனது தொழிலை இங்கேயே கொண்டு நடாத்த தீர்மானித்து விட்டேன்" என்ற கூற்றா னது அவர் தேசவழமைக்கு உட்பட்ட பிரஜை அல்ல என்பதனையே எடுத்துக் காட்டுகிறது.

**Spencer Vs Rajaratnam** வழக்கில் ஒருவர் தேசவழமைக்கு உட் பட்டவரா என்பது அது அவரையே சாரும்" என தீர்க்கப்பட்டது.

இங்கு தேசவழமைச் சட்டத்தின் கீழ் எதனையும் கூறப்படாதவிடத்து நீதிமன்றததில் எழும் பிரச்சினைக்கு எந்தச் சட்டத்தின் கீழ் தீர்வு காணப்படவேண்டும் என எழும் வாதப்பிரதிவாதங்களுக்கு றோமன் டச்சு சட்டத்தின் கீழ் (Roman Dutch Law) தீர்வு காணப்படவேண்டும் என கந்தையா Vs சரஸ்வதி வழககில் தீர்ப்பளிக்கப்பட்டது.

தேச வழமைச்சட்டம் ஆள் சார்ந்த சட்டமாக உள்ள அதேவேளையில் இடம சார்ந்த சட்டமாகவும் உள்ளது. தேசவழமைச்சட்டம் ஏற்புடையதாக உள்ள மாவட்டங்களில் உள்ள எல்லா தமிழர்களுக்கும் - அதாவது யாழ்ப்பாண மாகாண பூர்வீக குடிகளுக்கும் - தேசவழமைச்சட்டம் ஏற்புடையதான மாவட்டங்களில் உள்ள எல்லா அகனங்களுக்கும் கேச வமமைச் சட்டம் ஏற்புடையது.

ஆள் சார்ந்த சட்டம் என்ற முறையில யாழ்ப்பாணத்தவர் திருமண உரிமைகள், வழியுரிமைகள் கட்டளைச்சட்ட பிரிவு 3(1) (அ) தேசவழமைக்கு உட்படாத பெண்ணொருத்தி தேசவழமையால் ஆளப்படும் பிரதேசத்திற்கு உட்பட்ட ஆடவனைத் திருமணம் செய்தால் அவளின் திருமண காலத்தின்போது (During the Subis istance of their marriage) அவளும் தேசவழமையால் ஆளப்படுவாள்.

அதே சட்டத்தின் பிரிவு 3(1) (ஆ) தேசவழமைக்கு உட்பட்ட பெண்ணொருத்தி தேச வழமைக்கு உட்படாத ஆடவனைத திருமணம் செய்தால் திருமண காலத்தின்போது அவளும் தேசவழமையால் ஆளப்படமாட்டாள் என்று கூறுகிறது.

ஆனால் ஆதனங்களைப் பொறுத்த வரையில் தேசவழமைக்கு உட்படாதவர் தேசவழமை சட்டம் ஏற்புடையதான மாவட்டத்தில் காணியினை வாங்கின் அக்காணி தொடர்பில் தேசவழமைச் சட்டத்திற்கு அவர் கட்டுப்படவேண்டும். அதேபோல் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுபவர் தேசவழமைச் சட்டம் ஏற்புடையதாகாத மாவட்டத்தில் காணியினை கொள்வனவு செய்யின் அக்காணியின் வழியுரிமை தொடர்பில் அக்காணியும் தேசவழமைச் சட்டத்திற்கு உட்பட்டதாகவே கணிக்கப்படும். இது மாணிக்கவாசகர் Vs கந்தசாமி (1986) வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தேசவழமைச் சட்டத்தின் கீழ் ஆதனவகுப்பாக்கம

தேசவழமைச்சட்டத்தின் கீழ் ஆதனம் மூன்று வகையாக பிரிக்கப்படும்.

I கொள்ளப்பட்ட ஆதனம் அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் (Acquired Property)

II முதுச ஆதனம் (Mudusam Or Ancestral Property)

III சீதன ஆதனம் (Chidenam or Dowry Property)

## கொள்ளப்பட்ட ஆதனம் - அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் (Acquired Property)

1947ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட யாழ்ப்பாணத்தவர் திருமண உரிமைகள் வழியுரிமைகள் கட்டளைச்சட்டதின் கீழ் கொள்ளப்பட்ட ஆதனம் தேடிய தேட்ட ஆதனம் (Thediatettam) எனவும் அழைக்கப்படும். இது ஒரு ஆண் அல்லது பெண்ணால் திருமணத்திற்கு முன்னர் கொள்ளப்பட்டிருந்தால் அது அவரவர் தனிப்பட்ட சொத்தாக அமையும். ஆனால திருமணத்தின் பின்னர் இருவரும் சேர்ந்து இருவருடைய பெயரிலும் கொள்வனவு செய்யின் இருவருக்கும் திருமண காலத்தின் போது சம பங்காக அமையும். இது தேடிய தேட்டமாக கருதப்படும். இது மாணிக் கவாசகர் Vs கந்தசாமி வழக்கில் தீர்க்கப்பட்டது.

ஆனால் இவர்கள் தமது தனிப்பட்ட சொத்தை விற்று கொள்வனவு செய்யின் உதாரணமாக கணவர் தனது திருமணத்தின் முன் கொள்ளப்பட்ட அல்லது பெற்றோரால் முதுசமாக வழங்கப்பட்ட ஆதனத்தை கொண்டும் பெண்ணாயின் தனது திருமணத்தின் முன்னர் கொள்ளப்பட்ட அல்லது திருமணத்தின் முன்னரோ பின்னரோ பெற்றோரால் முதுசமாக அல்லது சீதனமாக வந்தடைந்த ஆதனத்தை விற்று திருமண காலத்தின்போது புதிய ஆதனத்தை கொள்வனவு செய்யின் அப்புதிய ஆதனம் தேடிய தேட்டமாக அமையாது மாறாக அவரவர் தனிப்பட்ட ஆதனமாகவே கருதப்படும்.

திருமண காலத்தின்போது கணவரோ, மனைவியோ அவரவர் உழைக்கும் பணத்திலிருந்து கொள்ளப்பட்ட ஆதனம் தேடிய தேட்டமாக கருதப்ப்ட்டு இருவருக்கும் சம பங்கை அவாகளில் ஒருவரின் இறப்பின் போது பாதிப் பங்கை உயிர் வாழும் வாழ்க்கைத துணைக்கு வழங்கும். ஆனால் 1986ஆம் ஆண்டு மாணிக்கவாசகர் Vs கந்தசாமி வழக்குத் தீர்ப்பு தேசவழமைச் சட்டததில் தேடிய தேட்ட வழியுரிமைக்கு புதிய வரைவிலக்கணம் வகுத்தது. இவ்வழக்கு முழுக் குழாம் (Full Bench Decision) தீர்ப்பில் பெரும்பான்மை தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசர் சர்வானந்தா 1911 ஆம் ஆண்டின் கட்ட ளைச் சட்டம் 1947ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தால் நீக்கப்படவில்லை எனக்கூறி 1911ஆம் ஆண்டின் யாழ்ப்பாணத்தவர் திருமண உரிமைகள் வழியுரிமைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 19(a) பெறுமதியான பிரதிபலன் கொண்டு கணவனால் அல்லது மனைவியால் திருமணகாலததில் கொள்ளப்பட்ட ஆதனம் 19(b) திருமண காலத்தில் ஈட்டப்பட்ட இலாபத்தினால் கணவனால் அல்லது மனைவியால் கொள்ளப்பட்ட ஆதனம் தேடிய தேட்டம் என வரைவிலக்கணப்படுத்துகிறது. இங்கு 1911 கட்டளைச் சடடப் பிரகாரம் தனிப்பட்ட ஆதனங்களைக் கொண்டு புதிய ஆதனம் வாங்கினும் தேடிய தேட் டம் என்றது. ஆனால் 1947இன் பின் அவவாறு அல்ல. 1911கட்டளைச் சட்ட பிரிவு 20 கொள்ளப்பட்ட தேடிய தேட்டம் ஆதனம் அது வாங்கிய உடனேயே கணவனுக்கும் மனைவிக்கும் சரிசமபங்காக சென்றடையும் என்கிறது. ஆனால் 1947 ஆம் ஆண்டின் யாழ்ப பாணத்தவர் திருமண உரிமைகள் வழியுரிமைகள் திருத்த கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6, 1911ஆம் ஆண்டு சட்டத் திற்கு பிரதியீடு (Substitution) செய்கையில் கணவனோ அல்லது மனைவி யோ இறப்பின்போது தேடிய தேட்ட ஆதனமானது சரி அரைப்பங்கு உயிர்வாழும் வாழ்க்கைத்துணைக்கும் இறந்த வாழ்க்கைத்துணை இறுதி விருப்பாவணம் (Last will) அல்லது வேறுவகை யில் உறுதி முடிக்காது விட்டால் அவரின் மிகுதி அரைப்பாகம் அவரது வழியுரித் தாளரை சென்றடையும் என்கிறது.

இங்கு சர்வானந்தா C.J.1911ஆம் ஆண்டின் சட்டம் 1947ஆம் ஆண்டின் சட்டம் கொண்டு வரப்பட்டவுடன் அது நீக்கப்படவில்லை எனவும் அதற்கு பின்வருமாறு பொருள் கோடல் (Interpretation) செய்தார். அதாவது தேடிய தேட்ட ஆதனம் கொள்ளப்படடவுடன் அது 1911ஆம் ஆண்டு சட்டப்படி உடனடியாகவே வாழ்க்கை த்துணைகளுக்கிடையில் சரி சமமாக பகிரப்படும். பின்னர் ஒரு வாழ்க்கைத்துணையின் இறப்பின் பின் அவர் தனது பாகத்தை இறுதி விருப்பாவணத்தல் அல்லது வேறுவகையில் உயிருடன இருக்கும் போது உறுதி முடிக்காவிட்டால 1947ஆம் ஆண்டின் சட்டப்படி அதில் அரைவாசி உயிர்வாழும் வாழ்க்கைத் துணைக்கும், மிகுதி அரைவாசி இறந்தவரின் வழியுரித்தாளருக்கும் சென்றடையும் எனத் தீர்ப்பளித்தார். இதன்படி உயிர் வாழும் வாழ்க்கைத் துணைக்கு முக்கால் பங்கும் மிகுதி கால்பங்கே இறந்தவரின் வழியுரித்தாளரை சென்றடையும். இது தேசவழமைச்சட்டத்திற்கு புரட்சிகரமான தீர்ப்பு எனலாம். ஏனெனில் உயிர்வாழும் வாழ்க்கைத்துணை மதிக்கப்பட்டு அவருக்கு தேடிய தேட்டப்பங்கில் பெரும்பானமை பங்கு வழங்குதல் ஒரு நல்ல காரண மாக அமையலாம். இதனால் கணவனை இழந்த பெண்கள் சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளும் இல்லாவிட்டால் கணவரின் வழியுரித்தாளருக்கு சொத்து வீணாக சென்றடைவதை தடுத்து விதவைப் பெண்ணுக்கு கூடிய சொத்துரிமை வழங்குவது சிறப்பான அம்சமாகும். இம் முழுக் குழாம தீர்ப்பு இன்னமும் புதிய தீர்ப்பால் முறியடிக்கப்படவில்லை எனலாம்.

இதன்படி பிரதம நீதியரசர் சர்வானந்தா 1947ஆம் ஆண்டு சட்டத்தின் பின்னரும் 1911ஆம் ஆண்டுச் சட்டமும் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே கருதுகிறார். இது சட்ட பொருள் கோடல் (Inter pretation) இல் ஒரு முக்கிய அம்சமாகும்.

## முதுச ஆதனம் (Mudusam Or Ancestral Property)

1911ஆம் ஆண்டின் சட்டத்தின் பிரிவு 15 முதுசம் என்பதற்கு வரைவிலக்கணம் தருகிறது. அதாவது ஒரு பெண் அல்லது ஆணுக்கு அவரது பெற்றோரின் (descent) இறப்பின் மூலம் அல்லது மூதாதையரின் (Ancestor) இறப்பின் மூலம் (ascendi ngline) வருவது முதுச ஆதனம் (Patrimonial inheritance) ஆகும் என்கிறது. இது தாய்வழியாக வந்தால் மாதாவழி முதுசம் (Maternal inheritance) எனவும் தந்தை வழிவந்தால் பிதாவழி முதுசம் (Paternal inheritance) எனவும் அழைக்கப்படும். 1947ஆம் ஆண்டு சட்டததில் இப பிரிவுக்கு திருத்தம் வரவில்லை. இங்கு முதுச ஆதனம் அவரவர் தனிப்பட்ட சொத்தாகும். இது அவர்களின் இறப்பின் பின் அவர்களின் வழியுரித்தாளரை சென்றடையும்.

## சீதன ஆதனம் (Dowry Property)

1806ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க தேசவழமை ஒழுங்கு விதி பகுதி 1 (2) இல் சீதனம் என்பது கணவனுடைய அல்லது மனைவியுடைய தனிப்பட்ட ஆதனம் அல்லது தேடிய தேட்ட ஆதனம் மூலம் ஒரு பெண் பிள்ளைக்கு திருமணத்தின் காரணமாக வழங்குவது எனப்படும். ஆனால் நன்கொடையாக வழங்கும் சொத்து சீதனம் அல்ல. தற்போது சீதனம் ஒரு சகோதரியின் திருமணத்தின் பொருட்டு சகோதர, சகோதரிகளாலும், சிறிய தாய், தந்தை, பெரிய தாய், தந்தை, மாமா, மாமி வழி போன்றோராலும் ஆதனம் சீதனம் என்ற பெயரில் உறுதி மூலம் வழங்கப்படலாம். சொத்துறுதியற்றுக் காலஞ்சென்ற தாய், தந்தை, பேரன் வ்ழி முதுச ஆதனங்களையும் இது தாயின் சீதன, நன்கொடை ஆதனம், தந்தையின் முதுச- நன்கொடை என்ற வகையில் பெறப்பட்ட ஆதனங்கள் மாதா, பிதாவின் தேடிய தேட்ட ஆதனங்களையும் தமது பங்கை பிள்ளைகள் தமது ச்கோதரிக்கு சீதன உறுதியாக வழங்கலாம்.

இதன் பிரகாரம சீதனம் குறிப்பிட்ட சில உறவுமுறையால் ஒரு பெண் பிள்ளையின் திருமணத்தின் காரணமாக திருமணத்தின் முன்போ அல்லது திருமணததின்போதோ அல்லது திருமணத்தின் பின்னரோ அதாவது கணவரின்இறப்புக்கு முன்னர் ஒரு பெண்ணுக்கு சீதன உறுதி மூலம் சீதனமாக ஆதனங்கள் வழங்கப்படலாம். இங்கு பெற்றோரின் சொத்தால் சீதனம் பெற்ற பெண்பிள்ளை தாயின் சொத்தில் சீதனம் பெற்றால் தாயின் மிகுதிச் சொத்திலும், தந்தையின் சொத்தில சீதனம் பெற்றால் தநதையின் மிகு திச் சொத்திலும் பின்னர் வழியுரிமை கோர முடியாது. எனினும் பெற்ற சீதனத்தில் போதாமை அதாவது பெற்றோர் அதிகரித்த சொத்தை வைத்துக்கொண்டு சிறிதளவு சீதனம் வழங்கியமை அல்லது சீதனம் கொடுத்த பின்னரும் பெற்றோர் புதிய ஆதனத்தை கொள்வனவு செய்யின் அவற்றின் முன்னர் சீதனம் பெற்ற பெண் பிள்ளை பின்னரும் அவற்றில் பங்கு கேட்டு வழியுரிமை கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம். இது பெற்ற சீதனத்தின் அளவை போதாமை என்ற வகையில் இப்பெண் பிள்ளையின் மனு கவனிக்கப்படும்.

தாயின் சீதன ஆதனம் தாயின் ஆதனத்தில் சீதனமாகப் பெற்ற பெண் பிள்ளை தவிர்த்து எல்லாப் பிள்ளைகளுக்கும் வழியுரிமைக்காக சென்றடையும். வழியுரிமை யாருக்குவரும் என்ற பிரச்சினை பெற்றோர் உயிருடன் வாழும் போது பிள்ளைகளுக்கு சொத்தை உறுதி மூலம் இறுதி விருப்பாவணம் மூலம் எழு தாது இறந்தால் அதாவது சொத்துறுதி அற்று காலஞ்சென்றால் (Intestate) மட்டுமே எழும் எனலாம்.

தந்தை தனது மனைவியின் சொத்துக்களை அவரின் இறப்பின் பின்னர் தனது மகளுக்கு சீதனமாக வழங்க முடியாது. இங்கு கணவருக்கு மனைவியின் சொத்துக்களில் சீவிய நல உரித்து (Life interest) மட்டுமே இருக்கும். (பிரிவு 37) மனைவிக்கும் அவ்வாறே எனலாம். அதாவது கணவரின் தனிப்பட்ட சொத்துக்களை மனைவி பிள்ளைகளுக்கு வழங்க முடியாது. அவருக்கு சீவிய உரித்து மட்டுமே கணவரின் ( பக்கம் பார்க்க) பாசொத்துக்களில் இருக் கும். கணவன் அல்லது மனைவி அல்லது இருவரின் இறப்பின் மீது சொத்து (பிரிவு 22) பிள்ளைகளிடையே முதலில் சென்றடையும். இது நாகரட்ணம் Vs அழகரட்ணம் தம்பிப்பிள்ளை Vs சின்னத்தம்பி வழக்குகளில் கூறப்பட்டது. ஆக, கணவனோ மனைவியோ தமது தனிப்பட்ட ஆதனங்களிலும் தமது கொள்ளப்பட்ட தேடிய தேட்ட ஆதனத்தில் தமது பங்கை மாணிக்கவாசகர் Vs கந்தசாமி வழக்குத் தீர்வுக்கு அமைவாகவும் மட்டுமே தமது பெண்பிள்ளைகளுக்கு சீதன உறுதியாக எழுதி வழங்கலாம். பெற்றோர் தமது பெண்பிள்ளைகளுக்கு சீத னம் வழங்குவது கடமையாகும். (தொடரும்....)

# எலிகளால் பரப்பப்படும் நோய்கள்

எலிகள் கொறிக்கும் விலங்கினத்தைச் சேர்ந்தவை இவை வளை எலி (Rattus norvegicus), வீட்டு எலி (Rattus rattus), சுணடெலி (Mus musculus) என மூவகைப்படும். வளை எலிகள் மிகவும் பிரகாசமான இளஞ்சிவப்பு நிறமுடையவை. வயிற்றுப்பகுதி வெள்ளை நிறமானது வீடடு எலி மங்கலான மேல் ரோமமுடையது. இதன் வயிற்றுப்பகுதி அழுககுப் படிந்தனவாய்த் தோன்றும். பருவகால மழை தொடங்கியதும் வளை எலிகள் மழையில் நனைவதைத் தவிர்க்கும் பொருட்டு வீட்டுக்குள் வா்ழ முயல்கின்றன.

நம்மிடையே எலிகள் வாழ்வதால் அவை நம் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் நோய்களைப் பரப்புவதற்கு முக்கிய காரணமாகின்றன.

மனிதனுக்கு வீட்டெலிகளாலும் சுண்டெலி களாலும் மிகுந்த தொல்லைகளும், அளவற்ற நாசமும் விளைகின்றன. எலிகளை அழிப்பதற்கு எடுததுக்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுறுகின்றன. எலிகளின் மிகக் கூடுதலான இனப்பெருக்க விகிதமே அதற்குக் காரணமாகும் உணவுப் பொருட்களை நாசம் செயதைவிட, எலியின் கறைபட்ட உணவு பார்ப்பதற்கு சுத்தமாகத் தென்படினும் சில வேளைகளில் அவை மனிதனுடைய ஆரோக்கியத்தைப் பாதிப்பதாக அமையக்கூடும்.

**பிளேக் (Bubonic plague**

எலிகளால் பரப்பப்படும் நோய்களுள மிக முக்கியமான பிளேக (Bubonic plague) எனப்படும் நிணநீர்க்கணுக் கொள்ளை நோயாகும். இந் நோயைப் பரப்பும் பிரதான காரணிகள் வளை எலியும, வீட் டெலியுமாகும். இதை விட வீட்டுச் சுண்டெலியும் நோயைப் பரப்பு வதில் பங்கு கொள்வதாக அறியப்படுகின் றது. இந்தியாவில் பிளேக் நோய பல்லாயிரக் கணககான மனிதர்களின் உயிர்களைக் குடித்துள்ளது. இக்கொடிய கொள்ளை நோய் முக்கியமாக எலிகளுடனும், எலித்தெள்ளுகளுடனும் (Xenopsylla cheopis) தொடர்புடையதாகும். பிளேக் இயற்கையாகவே எலிகளின் தொகையைக குறைப்பதற்காக தவறாமல் தோன்றி வருகின்றது. கொள்ளை நோய் கண்ட எலிகள இறந்துவிடுகின்றன. நோயுள்ள எலிகளின் இரதத்தைக் குடித்த தெள்ளுகள் மனிதனையும் தாக்குகின்றன. மனிதனின் இரத்தத்தைக் குடிக்கும் வேளையில் கொள்ளை நோய்க கிருமிகளை (Yarsiniapestis) உடலுள் செலுத்துகின்றன. தெள்ளு கடித்த இடத்தில் ஆரம்ப காயம் உண்டாகி 24 மணித்தியாலயத்தில் அரை, அக்குள், கழுத்து நிண நீர்க்கணுக்கள் பருத்து பின் உடைந்து சீழ் சுரக்கும். காய்ச்சல், நடுக்கம், தலையிடி, விறைப்பு நிண நீர்க்கணு நோவு முதலியன காணப்படும்.

**எலிக்கடிக் காய்ச்சல் (Rat bite fever)**

எலிகள் கடிப்பதால் எலிக்கடிக் காய்ச்சல் (Rat bite fever) என்னும் நோய் உண்டாகிறது. இந்நோய் நீண்ட நாட்களுக்குப் பின்னரும் குணமாவதில்லை. மனிதனுடன் பழக்கப்பட்ட எலிகள் மினவும் துணிச்சலாக தூங்கும் மனிதர்களையும் குழந்தைகளையும் அடிக்கடி தாக்க முயல்கின்றன. எலிக்கடிக் காய்ச்சல் இரண்டு விதமானது. Spirullum minus என்ற கிருமியால் ஏற்படும் சொடொகு காய்ச்சல் ஒன்று மற்றையது Actinobacillus Muris என்ற பக்ரீரியாவினால் ஏற்படும் ஹேவஹில் காய்சசல்.

கடிகாயம் குணமடைந்தாலும் உள் இளையங்கள் அழற்சியுற்று ஆழியும், இப்பகுதி நிணநிர்க்கணு பருத்து மென்மையடையும் காய்ச்சல் மூன்று நாட்களுக்கு 40°C ஆகவும் மேலும் மூன்று நாட்களில் நிறைய வியர்த்து காய்ச்சல்விடும். மீண்டும் காய்ச்சல் வந்து நெஞ்சிலும், கைகளிலும ஊதா நிறத் தழும்புகள் ஏற்படும். ஹேவஹில் காய்ச்சலை உண்டு பண்ணும் கிருமிகள் எலியின மூத்திரம் மூலம் பாலில் கலந்தே நோய் தொற்றுகின்றது.

**வெயில்ஸ் நோய (Weils Disease)**

Weils நோய் ஒரு தொற்றும் மஞ்சளகாமாளை ஆகும். காரணி எலிகளால் காவப்படும் பற்றீரியா உணவு, நீர் மற்றும் எலிகளால் அளையப்பட்ட பொருட்கள் மூலம் தொற்றுகின்றது. கப்பற்றுறை, சுரங்கம் ஆகியவற்றில் வேலை பார்ப்பவர்களில் அடிக்கடி ஏற்படும் குணங்குறிகளாக குளிர் காயச்சல், தலையிடி, தசை நோ, ஐந்தாம் நாள் காமாளை உண்டாகும். சலத்தில் அலபுமின், செங்குருதக்கலன்கள், பித்தச் சுரப்பு காணப்படும். காமாளை தோன்றாதவர்களில் மரணவிகிதம் குறைவு. இந்நோயிற்கு லேப்ரோஸ் பைறோசிஸ (Leptospirosis) என்றும் பெயருணடு. நோய்க் காரணி தொற்றுள்ள எலிகளின் சிறுநீரில் கழிக்கப்படும. மண் அல்லது நீர் மூலம் மனிதருக்குத் தொற்று ஏற்படுகின்றது. 10% நோயாளிகளில் இறப்பு நேரிடும்.

**லிம்போசைரிக் கோறியோ மெனிஞ்ஜயிரிஸ**

Lympgo Cytic Meningitis Virus கிருமி வீட்டெலிகளுக்குத தொறறக்கூடியது. வைரஸ் தொற்றுள்ள கர்ப்பிணிப் பெண்கள் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு Hydrocephalus (மூளைக்குள் நீர் ஏற்படும். கிருமிகள் எலிகளால் உமிழ் நீர், சிறுநீர் ஆகியவற்றில் கழிக்கப்படும். காற்றில் மிதக்கும் வைரஸ் கிருமி சுவாச மூலம் தொற்றை ஏற்படுத்தும்.

**நாடாப்புழுத் தொற்று**

Hymenolepis diminuta என்ற நாடாப்புழு எலிகளில் ஒட்டுண்ணிகளாக வளரும். இந்த நாடாப்புழுத் தொற்று மனிதருக்கும் பரவக்கூடியது. இத் தொற்று எலிகளில் எலித் தெள்ளுகள், வண்டுகள் மூலம் பரவுகின்றது. தொற்றுள்ள தெள்ளுகளை அல்லது வண்டுப் பூச்சிகளை உட்கொண்டவுடன் இந் நாடாப் புழுத் தொற்று ஏற்படுகின்றது.

மேலும் Scrb typhus, Murine typhus, Rabies, Salmonella gastroenteritis, Trichinosis ஆகிய நோய்களும் எலிகளால் மனிதருக்குப் பரப்பப்படுகின்றன.

**எலிகளைக் கட்டுப்படுத்தல்**

எலிகள் இல்லாத இடமே இல்லை எனலாம். வீட்டில், வயல்களில், சேரிகளில் நகர்களில் வாழ்கின்றன. ஆகையால், மனிதரும் எலிகளும் தோளோடு தோளாக வாழ்ந்திருக்கின்றனர். ஆனால், அவை இப்போது நெருக் கடியை உண்டுபண்ணுகின்றன. எலிகளின் எண்ணிக்கை கூடியதுடன் எமக்கு எலிகளுடனான தொடர்பும், அவற்றால் காவப் படும் நோய்க காரணியுடனான நெருக்கமும் சந்தேகத்திற்குரியனவாகின்றன.

**எலிகளை ஒழிக்க**

- எலிப்பொறி, எலிப்பாசாணம் முதலியவற்றை உபயோகிக்கலாம். Warfarrin என்ற எலிப பாசாணத்தைக் கட்டிப் பொருளாக உணவுடன் கலந்தோ அல்லது நீரில் கரைத்தோ எலிகளுக்கு வைக்கலாம். (எலிகள் Warfarrin போன்ற பாசாணங்களுக்கு எதிர்ப்புத் தன்மையைக்காட்டுகின்றன. ஆகையால் Calciferol கலந்த Warfarrn ஐஉபயோகிப்பர்)
- களஞ்சிய அறைகளில் கந்தக ஈரொட்சைட் ($SO_2$) வாயுவைப் பிரயோகிக்கலாம்.
- வீடுகள் களஞ்சிய அறைகளை இயலுமான அளவு எலிகள் உட்புகாதவாறு அமைக்கலாம். ஆனாலும் எலிகள் துள்ளிப்பாய்ந்தோ அல்லது துளைகிண்டியோ உட்செல்லக்கூடும்.
- பூனை வளர்த்தல் உயிரினவியல் முறையில் எலிகளைக் கட்டுப்படுத்தும்.

நாம் எடுக்கும் எந்த முறையையும் வெல்ல எலிகளால் முடியும். அத்துடன் எலிகளின் கூடுதலான இனப் பெருக்க விகிதமும் சேர்ந்து மனிதரின் சுகாதாரத்திற்கு ஒரு சவாலாகவே அமைகின்றது. **நன்றி 'சுகநலம்'**

**வைத்திய கலாநிதி இ.இராஜராஜேஸ்வரன்**

# ஸ்ரீ.சு.கவை பிளவுபடுத்த ஒருபோதும் அனுமதியேன்

## மஹிந்தராஜபக்ஷ

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் குழுக்களாகப் பிரிந்து செயற்படும் ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டு கோள் விடுத்துள்ளார்.



சிறிலங்கா சுதந்திரக் கடசியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைப்பாளாகளை கடந்த 29ஆம் திகதி அலரி மாளிகையில சந்தித்தபோதே அவர் இவ் வேண்டுகோளை விடுத்தாா.

கட்சியை பிளவுபடுத்த தான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன. என்று தெரிவித்த மஹிந்த கட்சிக்குள் குழுக்களாக பிரிவதற்கு சிலர் முயற்சிப்பதாக தனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவ்வாறு நிகழ இடமளிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

நாட்டை முன்னேற்றுவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செய்றபட வேண்டும் என்றார்.

எதிர்வரும் காலத்தில் ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த சிலர் அரசாங்கத்துடன் இணையலாம் என்றும் அவர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்க வேண்டி ஏறபடும் என்றும் மேலும் தெரிவித்தார். (த-4)

# கடத்தப்பட்ட கென்யா கப்பல் விடுவிக்கப்பட்டது

சோமாளியா கடற்பரப்பில் கடற்கொள்ளையரால் கடத்திச் செல்லபபட்ட 52நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சோமாளிய கபபல் கப்படனுடன் விடுவிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கென்ய கம்பனியொன்றுக்குச் சொந்தமான இந்தக கப்பல் கென்யாவிலிருந்து சோமானியா எலமான் துறைமுகத்தை சென்றடைய இருந்த போது கடற்கொள்ளையரினால கடத்தப்பட்டது. சோமாளியா தலைநகரிலிருந்து 300 மீற்றர் தொலைவில்

இந்தக் கப்பலில கப்டனாக கடமையாற்றிய இலங்கையரும் ஏனைய உத்தியோகத்தர்கள் 9 பேரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். காலியைச் சேர்ந்த எச்.ஏ.சில்வா என்பவரே இக் கப்பலின் கப்டனாவார். (த-8)

# மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்வார்

இலங்கையி'ன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 16ஆம் திகதி மூன்று நாட்கள் சுற்றுப்பயணமாக இந்தியா செல்லவுள்ளார். இந்த சுற்றுப்பயணத்தின் போது இலங்கையில் அமைதியை ஏற்படுத்த விடுதலைப் புலிகளுடன் அமைதிப பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் மற்றும் இந்தியா, இலங்கை நாடுகளுக்கிடையேயான உறவு குறித்து இந்தியத்தலைவர்களுடன் ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்துவார்.

ராஜபக்ஷவின் சுற்றுப்பயணம் குறித்து அதிகாரப் பூர்வமான தகவலகள் எதுவும் கிடைக்கவில்லை ஆயினும் இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் இந்திய வெளியுறவுதுறை அமைச்சர் இ.அகமது ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது ராஜபக்ஷவின் இந்திய சுற்றுப் பயணம் குறித்த திகதிகள் முடிவு செய்யப்படடன என்று தெரிவிக்கப்படுகிறது. (த)


**இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் படவிளக்கக்கண்காட்சியும், தியான அனுபவமும்**

இன்றைய உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றான். ஏனெனில் சந்தோஷமே நாம் வாழ்கின்ற வாழ்வின் பலம் ஆகும். இந்த சந்தோஷம் எனும் பலத்தை நம் குடும்பத்தில் கட்டியெழுப்புவதற்கு அமைதி என்ற அளப்பரிய பொக்கிஷமே அத்திவாரமாக அமைகின்றது. ஆனால் இன்று அனைவருமே இந்த அமைதி என்ற அரிய பொக்கிஷத்தைத் தான் உலகில் எல்லா திசைகளிலும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அமைதியை வேண்டி அமைதிப் புறாக்களை எங்கும் பறக்கவிட்டோம். ஆனாலும் இந்த அமைதி கிடைத்து விட்டதா என்ன? நாம் சட்டைப் பைக்குள் வீட்டு சாவியை வைத்துக் கொண்டு வெளியில் அதைத் தேடுவோமே அது போலவே இந்த அமைதி என்ற அரிய பொக்கிஷம் கூட நமக் குள்ளேயே இருக் கின்றது. ஆகவே முதலில் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கின்ற அமைதியை நாம் வெளிக்கொண்டு வருதல் வேண்டும். அதற்கு ஆன்மீகமே சிறந்த வழி ஆகும்.

ஆன்மீகம் என்பது ஒரு மனிதனை நற் குணங்களின் அடிப்படையில் வாழ வைப்பதுவும், வாழ்க்கையில் வருகின்ற இன்ப துன்பங்களையும், மேடு பள்ளங்களையும் இலகுவாகக் கடந்து சென்று நம் இலக்கினை அடையச் செய்யும் இலகுவானதொரு வழிமுறையாகும். அத்தோடு ஆன்மீகம் என்பது அன்புக் கடலும், அமைதிக் கடலும், பேரானந்தக் கடலுமாகிய இறைவனுக்கும், மனித ஆத்மாவுக்கும் இடையில் சிறந்ததொரு இணைப்பை உருவாக்கி சந்தோஷமாக வாழ்வதற்கு வழியமைத்துக்கொடுக்கின்றது. ஆகவே இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற ஆன்மீக படவிளக்கக் கண்காட்சியிலும், அமைதியின் அனுபவத்தைப் பெற்றுத் தருகின்ற தியான நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளுமாறு யாழ். பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் யாழ்.மக்கள் அனைவரையும் மிகவும் அன்போடு அழைக்கின்றார்கள்.

**ஆன்மீகப் படவிளக்கக் கண்காட்சியும், தியான அனுபவமும்.**

**இடம்:-** யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம், 05 A, 2வது ஒழுங்கை, பலாலி வீதி.

**காலம்:-** 10-12-2005 காலை 10.00 மணி முதல், மாலை 8.00 மணி வரை.
11-12-2005 காலை 10.00 மணி முதல் மாலை 8.00 மணிவரை.

**அனுமதி இலவசம்** (C/9995)

# பாம்புக் கடிக்கான அவசர சிகிச்சைகள்



"பாம்பு" என்றவுடன் நமது மனதிற்குள் பயம் படமெடுத்து விடுகிறது. உடல் அச்சத்தால் நடுங்குகிறது. பாம்பிற்கு படையே நடுங்குமென்று கூறுவதிலிருந்து பாம்பைப் பற்றி மக்கள் மனதிலுள்ள பீதி தெளிவாக விளங்குகிறது. இன்று பாம்புக்கடி கிராமப்புறங்களில் சகஜமாகி விட்டது. இதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகியுள்ளது. எனவே இந்த விஷயத்தை குறித்து மக்கள் அறிந்துகொள்வது அவசியமாகிறது.

உலகில் 3,500க்கும் மேற்பட்ட பாம்பு வகைகள் **(Snake species)** இருக்கின்றன. என்றாலும், அதில் ஐந்து வகைகள்தான் விஷமுள்ளதாக **(Poisonous snakes)** கருதப்படுகிறது. மீதி உள்ளவை விஷமில்லாத பாம்புகள் **(Non- poisonous snakes)** ஆகும்.

### விஷமுள்ள பாம்புகள

நல்ல பாம்பு**(Cobra)**, கண்ணாடி விரியன் **(Kraits)**, கட்டுவிரியன் **(Vipers)** கடல் பாம்புகள், **(Sea snakes)** மற்றும் பறவை பாம்புகள் **(Boom slangs & Bird snakes)** ஆகியவை மிகவும் விஷமுள்ள பாம்புகளாகும்.

### விஷமில்லாத பாம்புகள்

பச்சை பாம்பு, கொம்பேறி மூக்கன், தண்ணீர் பாம்புகள் தொடங்கி மலைப் பாம்பு வரை. மீதமுள்ள 3495 வகை பாம்பிற்கும் விஷமில்லை.

உலகிலேயே பாம்புக் கடியினால் அதிகம் பாதிக்கப்படாதவர்கள் ஐரோப்பியக் கண்டத்தினர்தான். கடந்த ஐம்பது ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளில் பாம்புக் கடியினால் இறந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 10ற்கும் குறைவானதுதான்.

வருடந்தோறும் பாம்புக் கடியினால், உலகம் முழுவதும் இறப்பவர்களின் எணணிக்கை 30,000லிருந்து 40,000 வரையாகும். அமெரிக்காவில் இதனால் இறப்பவர்களின் எண்ணிக்கை 9,000 ஆகும்.

பாம்பின் உமிழ்நீர் ஒருவித **(Salivary secreations)** மாற்றமடைந்து விஷமாகி விடுகிறது. இதில் பல்வேறு புரோட்டீன் பொருட்களும், பல்வேறு என்ஸைம் பொருட்களும் அடங்கியிருக்கும் **(Toxic proteins & enzymes).**

நல்ல பாம்பு, கண்ணாடி விரியன், கட்டு விரியன் போன்ற பாம்புகளின் விஷம் இதயத்தையும், இரத்தத்திலுள்ள பல்வேறு செல்களையும் பாதிக்கிறது. **(Cardio toxic)** கடல் பாம்பின் விஷம் பெரும்பாலும் நரம்பு மண்டலத்தை பாதிப்பதாக உள்ளது. பாம்பு கடிக்கின்றபோது அதன் உமிழ்நீர் சுரப்பி அழுத்தப்பட்டு துளையுள்ள கூரிய பல்லின் வழியாக விஷம் மட்டும் உடலுக்குள் செலுத்தப்படுவதில்லை. பாம்பின் வாயிலிருக்கும் "டெட்டனஸ்" நோய்க் கிருமி மற்றும் எண்ணற்ற நோய் கிருமிகள் செலுத்தப்படுகின்றன.

பாம்பு கடிக்கும்போது... உட்புகும் விஷம், அது கடித்த இடம், உடலின் அளவு ஆகியவற்றை பொறுத்து பரவுகிறது. குழந்தையைக் கடித்தால்... அவர்கள் உடனடியாக இறந்துவிட வாய்ப்பு ஏற்படுகிறது...

### முதலுதவி

பாம்பு கடித்தவரின் கால்களையோ அல்லது கடிபட்ட பாகத்தையோ அதிகமாக அசைக்கக்கூடாது. பாம்பு கடித்தவர் வேகமாக ஓடினால்... அதனால் உட்புகுந்த விஷம் மேலும் வேகமாக உடலெங்கும் பரவிவிடும்.

கடிபட்ட பாகத்தின் மேற்பகுதியினை இறுக்கமாக துணியினால் கட்டவேண்டும். பலரும் நினைப்பது போல இது உட்புகுந்த விஷத்தை இரத்தக் குழாயில் தடை செய்ய அல்ல. **(Venous return obstruction)** மாறாக, காலிலோ உடலின் வேறு பகுதியிலோ ஏறிய விஷம் நிணநீர் குழாய்களின் வழி செல்வதை தடுப்பதற்கே ஆகும் **(Lymph- flow- obstruction).**

எனவே, இப்படி இறுக்கமான துணியை வைத்து கடிபட்ட இடத்திற்கு மேலாக சுமார் 3-4 செ.மீ அளவில் கட்ட வேண்டும். அப்படி கட்டப்பட்ட துணியின் வழியாக ஒரு விரலை கஷ்டப்பட்டு நுழைக்கின்ற அளவு அதன் இறுக்கநிலை இருந்தால் போதுமானது.

முன்பெல்லாம், கடிபட்ட இடத்தை கத்தியால் கீறி... வாயை வைத்து உறிஞ்சி துப்புவது என்பதும், பாம்பு கடித்த இடத்தில் ஐஸ் கட்டியை வைப்பதும் வழக்கமாக இருந்தது. ஆனால் இவற்றால் பெரிய பயனில்லை என சமீபத்திய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மேற்கூறிய இரண்டு முறைகளாலும்... இரத்த ஓட்டம் பாதித்த பகுதியில் குறைந்து **(Iscshaemia)** அதன் செல்கள் எளிதில் இறந்துவிடுகின்றன.

### மருத்துவமனையில்...

பாம்பு கடித்தவரை எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக நல்ல வசதியுள்ள நவீன மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல வேண்டும். அங்கு பாம்பு கடித்தவருக்கு... விஷத்தை முறிக்க... "எதிர் சக்தி மருந்து" **(Polyvalentanti venom) (ASV- Anti snake venom)** என்ற மருந்து செலுத்தப்படுகிறது. இந்த மருந்து தான் விஷத்தை முறிக்க உதவும் ஒரே மருந்து. இந்த மருந்து எல்லாப் பாம்புக் கடியின் வஷத்தையும் முறிக்க உதவுகிறது.

இந்த மருந்தை உடலில் செலுத்துவதற்கு முன்னால்.. இது உடலில் சேருமா, சேராதா என டெஸ்ட் செய்தபிறகே செலுத்த வேண்டும். ஏனெனில், சிலருக்கு இந்த மருந்து பிடிக்காமையால்... ஒவ்வாமை ஏற்பட்டு **(Allergic to horse serum)** பல்வேறு பின் விளைவுகளை ஏற்படுத்துவதுடன்... உயிரிழப்பிற்குக்கூட காரணமாகிவிடும்.

பாம்பு கடித்த இடத்தில்கூட இதே மருந்தை செலுத்தி விஷத்தை முறிக்கவும் சிலர் பயன்படுத்துகிறார்கள்.

இத்துடன் இரணஜன்னிக்குள்ள தடுப பூசியை **(Tetanos toxoid)** போடவும் வேண்டும்.

இவர்களின், நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம், வெளியேறும் சிறுநீரின் அளவு, இரத்த செல்களின் அளவு, தாது உப்புகளின் நிலை, இதயம் இயங்கும் வதம் **(Cardiac function & monitoring)**, இரத்த உறை பொருட்களின் அளவு **(Coagulation factors)**, சுவாச இயக்கம் **(Respiration)**, நரம்புகளின் செயல்படும் நிலை **(Nervous system involvement)**, சிறுநீரக இயக்கம் **(Renal function)** ஆகியவற்றை அவசரப் பிரிவில் தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும்.

காயம் பட்ட பகுதியை சுத்தம் செய்து அதிலிருக்கும் கசடுகளை நீக்கவேண்டும் **(Surgical debridements).** வலியை குறைபபதற்காக பல்வேறு ஆஸ்பிரின், மெப்பிரிடின் **(salicylates & Meperidine)** போன்ற மருந்துகளை பயன்படுத்துவார்கள்.

இன்று பாம்புக் கடி பெரும்பாலும் கிராமங்களில் நிகழ்வதாலும், அருகில் நவீன மருத்துவ வசதிகள் குறைவினாலும் பல்வேறு கிராம வைத்தியர்கள் பாம்புக் கடிக்கு வைத்தியம் செய்கிறார்கள். இவாகள் தரும் மருந்து என்ன? அதிலுள்ள இரசாயனப் பொருட்கள் என்ன? அவை எப்படி விஷத்தை முறிக்கின்றன என்ற ஆயவு இதுவரை நடத்தப்பட்டு அறிக்கை வெளியிடப்படவில்லை. ஆனாலும் பாம்பு கடித்தவுடன் இவர்களிடம் மருந்து வாங்கி சாப்பிட்டு உயிர் பிழைத்ததாக சிலர் கூறுகிறார்கள்.

**டாக்டர் முத்துச் செல்லக்குமார்**

விஷமில்லாத 3495 வகை பாம்புகளில் ஏதோ ஒன்று இவர்களைக் கடித்து உடலில் விஷம் ஏறவில்லை என்பதுதான் இதன் பொருள்- அர்த்தம். முடிந்தளவு.. கடித்த பாம்பை அருகிலிருப்பவர்கள் பிடித்தோ/ அடித்தோ கொண்டு வருவாகளாயின் அந்தப் பாம்பை வைத்து அது விஷமுள்ள பாம்பா அல்லது விஷமற்றதா எனபதை அறிந்துகொள்ள முடியும. இன்று பலரும் பாம்பு கடித்தவுடன் இறந்து விடுவோம் என்ற பீதிக்கு ஆளாகி விடுகிறார்கள். சிறிது வயதானவர்கள் மாரடைப்பினால் மரணம் கூட அடைந்து விடுகிறார்களா.

எனவே இவர்களுக்கு தைரியம் **(Re-assurance)** தருதல் மிகவும் அவசியமாகும். விஷமுள்ள பாம்பு என்றால் தைரியம் தருவதுடன் தீவிர சிகிச்சையினையும் மேற்கொள்ள வேண்டும்.

## யாழ். கல்வி வலய விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தின் இவ்வாண்டுக்கான விளையாட்டுவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி பரமேஸ்வரி கணேஷ் பரிசில்களை வழங்குவார் என உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (த)

## மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி

(யாழ்ப்பாணம்)

டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சியொன்று கடந்த 29ஆம் திகதி நெடுங்கேணி பிரதேசத்திலுள்ள கீரிசுட்டான் கிராமத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும், 30ஆம் திகதி நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள பட்டிக்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

இதில் **DRC** நிறுவனத்தின் சார்பில் ஆவணத்திற்குப் பொறுப்பான வெளிக்கள உத்தியோகத்தர்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் கீரிசுட்டான் சமூக ஊக்குவிப்பாளரும், அக்கிராம மக்கள் சார்பில் அமைப்பு உறுப்பினர் உட்பட சுமார் 25 பேரும், பட்டிக்குடியிருப்பு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் சுமார் 35 பேரும் கலந்துகொண்டனர். இப்பியிற்சியில் அடிப்படை மனித உரிமைகள் பற்றி தெளிவாக விளக்கப்பட்டது. (த)

## கூடைப் பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் 2005 ஆம் ஆண்டு கூடைப் பந்து விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 3.15 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் இலங்கை பல்கலைக் கழக அணிக்கு எதிராக பற்றீஸியன் விளையாட்டுக்கழக அணி விளையாடும். (த)

## ஆசிரியர் பிரயாணப் படி

(சாவகச்சேரி)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிய தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் தங்களது பிரயாணப்படி கோரிக்கைகளை இம்மாதம் 9ஆம் திகதிக்கு முன் தென்மராட்சி கல்வி வலயத்தில் சமர்ப்பிக்கும்படி தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-108)

## 20 கல்வி ஆலோசகர்கள் நியமனம் அறிக்கை கோருகிறார் கல்வி அமைச்சர்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் தாரா டி மெல் நிர்வாகத்தின் போது நியமிக்கப்பட்ட 20 கல்வி ஆலோசகர்களின் சேவை நிறுத்தப்படலாம் எனவும் இவர்களுக்கு ரூபா 30,000 சம்பளமாக வழங்கப்படுவதுடன் வாகனமும், எழுதுவினைஞர் ஒருவரும், குளிரூட்டப்பட்ட அலுவலகமும் வழங்கப்பட்டுள்ளதாகவும்,

இவைதவிர, இரண்டாந்தரப் பாடசாலைகள்ள நவீனப்படுத்துவத்றகென வெளிநாட்டு ஆலோசர்கள் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் புதிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்துக் கல்வியமைச்சின் அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முதலாம்ஆண்டிற்கு மாணவர்களை சேர்க்கும் பணிகளுக்கும் அமைச்சினால் பெருமளவு பணம் விரயமாவதுடன், பெருமளவு ஒழுங்கீனங்களும் நடைபெறுவதாகவும் கல்வி ஆலோசகர்களின் சேவை பற்றிய இறுதி முடிபொன்றை எடுப்பதற்கு இலகுவாக அமைச்சர் தனது அதிகாரிகளிட்ம் அறிக்கை கோரியுள்ளதாகவும், அறக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (த-6)

## பண்டிகைக் காலத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் இறக்குமதி

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்திற்குத் தேவையான சகலவித பொருட்களும் போதியளவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்கள் என்பவற்றுககுத் தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவும் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இது குறித்து இறக்குமதியாளர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்,அரசாங்கத்தின் வரி மற்றும் தீர்வைக் குறைப்புக்களின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும் என்றார்.

சங்கத்தின் தலைவர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், துணிவகைகளையும், ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் களஞ்சியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

பண்டிகைக் காலத்தில் பொருட்களை வாங்குவோரை நிச்சயிக்கும் வகையில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ள்து.

உணவுத் திணைக்களம், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அரச திணைக்களங்களும் பண்டிகைக்காலத்தில் பாவனையாளர்களுக்கு உதவ முன்வந்துள்ளனர். (த-9)

## அரசியலமைப்புச் சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்குக

### மனித உரிமை ஆ.குழு கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சபைக்கு உடனடியாக அங்கத்தவர்களை நியமிக்கவேண்டுமென மனிதவுரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நியமனங்கள் வழங்கப்படாவிட்டால் 18ஆவது அரசியல் அமைப்பு சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட பல ஆணைக் குழுக்களின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அதனை இயங்கச்செய்ய முடியாமல் போய்விடுமென்று ஆணைக்குழுவின் செயலாளர் டி சில்வா தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவும் இந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டதென்றும் அதன் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முடிவடைய இருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசியல் அமைப்பு சபைக்கு உறுப்பினர்களை நியமிக்காவிட்டால் பதவிக் காலம் முடிவடைவதற்குள் ஆணைக் குழுகளின் உறுப்பினர்களை நியமிக்க அரசியல் சட்டத்தில் மீண்டும் திருத்தம் கொண்டு வரநேரிடும். அரச சேவைகள் ஆணைக்குழுவின் பதவிக்காலம் நேற்று முன்தினம் முடிவடைந்தது. அதேவேளை, பொலிஸ் ஆணைக்குழுவின் பதவிக் காலம் கடந்த 24ஆம் திகதியுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.(த-8)

# ஆழிப்பேரலை புனரமைப்பிற்கென மீளமைப்பு அபிவிருத்தி நிறுவனம் அமைப்பு

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை புனரமைப்புக்களுக்காக மீளமைப்பு அபிவிருத்தி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது அமுலில் உள்ள ரவ்றன, ரவ்பார் மற்றும் ரவ்லொஸ் ஆகிய மூன்று நிறுவனங்களை உள்ளடக்கிய விதத்தில் அரசியல் அமைப்பின் 33 ஆவது சரத்தின்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப் புதிய நிறுவனத்தை அமைத்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஆழிப்பேரலையில் ஏற்பட்ட அழிவுகளை மீண்டும் ஆராயந்து அதனை நிவர்த்திசெய்வதற்காக இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திரான் அலெஸ் என்பவரைத் தலைவராகக் கொண்ட இவ்வமைப்பு நால்வரை உறுப்பினராகக் கொண்டுள்ளது. இதில் வெளிநாட்டு மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகள் இருவரும் உள்ளடங்குவர்.

இந் நிலையில் குறித்த நிறுவனமானது பாராளுமன்ற சட்ட மூலத்தின் மூலம் அதிகார சபையாக அங்கீகாரம் பெறவுள்ளது. (ச-4,8)

# PROVINCIAL PUBLIC SERVICE COMMISSION, NORTH EAST PROVINCIAL COUNCIL

## RECRUITMENT OF LEGAL OFFICER

Applications are invited for the post of legal officer in the Legal Unit of the North East Province.

The applicant should be a citizen of sri Lanka and should have had at least three years continuous permanent residence in North East Province within the six years immediately prior of the last date of receiving of applications.

**No of positions: 01**

**Age limit** : Not more than 45 ycars of age. The upper age limit is not applicable to those who are already in Govt. / provincial Public Service.

**Educational Qualification:**

Candidate should be an attorney - at - Law of the Supreme Court of Sri Lanka with at least 02 years experience.

**Salary scale :**

195,300 - 4x 3,780 - 2x5,760 - 1x7,740 - 3x8,580 - 255.420/- (TB - 12- 10)

**Terms of Service :**

The Post is Permanent with contributions to the contributory pension fund as per Management Services Circular. In the case of an employee holding a permanent post, entitled to a pension under the pension minute with contributions to the widows/ widowers and orphans pension scheme, if selected, will be permitted to continue.

**Conditions :**

As presctibed in section 10:6 - 10:6:4 and section 12, chapter 11 of the establishment code and general conditions applicable to appointments in public Service, advertised in the Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka.

**Selection:** By an intcrview.

**Applications** to reach Secretary, Provincial public Service Commission, No.35, Mc Keyzer Road, Orr's Hill, Trincomalee on or before 16.12.2005.

**V.P.Balasingham,**
**Secretary,**
**provincial public Service Commission,**
**North East Province,**
**Trincomalee.**

(C/1847)

# பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிக்கும் நிலை

## தென்மராட்சி நெற் செய்கையாளர் கவலை

(தனங்கிளப்பு)

தென்மராட்சி தெற்கில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கை அண்மையில் குடாநாட்டில் பெய்த கடும் மழை காரணமாக பெருமளவு அழிந்துள்ள நிலையில் மிகுதியாக உள்ள நெற்பயிர்கள் கட்டாக்காலிக் கால்நடைகளால் அழிவடைந்துவருவதாக இப் பகுதி விவசாயிகள் பெரும் வேதனையுடன் தெரிவிக்கிறார்கள்.

அதிக பணச்செலவில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை கட்டாக்கலிகளால் மாத்திரமல்ல; யுத்த நடவடிக்கையின் பின்னர் இப்பகுதியில் அலைந்து திரியும் பன்றிகளாலும் அழிந்து வருகின்றன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் கடந்த வருடம் நெற்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டபோது விவசாய நிலங்களைச் சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டது.

இப் பாதுகாப்பு வேலிகள் பின்னர் அகற்றப்பட்டுள்ளது. இம்முறை பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவில்லை எனவும் இதனால் தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய உயர்பாதுகாப்பு வலயத்தில் அகப்பட்டுள்ள கால்நடைகளே இப் பயிர்ச்செய்கையை அழித்து வருகின்றன எனவும் இது குறித்து விவசாய சம்மேளனங்களோ, உரிய அதிகாரிகளோ எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் அப்குதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (த-37)

## எச்.என்.பியின் வாடிக்கையாளர் நிலையம்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் புதிய வாடிக்கையாளர் நிலையம் எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 12.15 மணிக்கு யாழ்.வீதி மானிப்பாயில்திறந்து வைக்கப்படவுள்ளது. (ச-132)

# புரட்சிகரமான மாற்றம் நிகழும் காலம் அண்மித்துள்ளது - சந்திரிகா

(கொழும்பு)

இலங்கையில் புரட்சிகர மாற்றம் ஏற்படுகின்ற காலம் எழுந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துளளார்.



நேற்றுமுன்தினம் தனது பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எனது பதவிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிகளவான திட்டங்களைப் புதிய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும்.

பல்வேறு கொள்கைகளைக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஐக்கியம் தேவைப்படுகின்றது. இதன் கீழ் இலங்கை மக்களுக்கு பாரிய சவால்கள் காத்திருக்கின்றது.

சமாதானம் என்பது இலங்கையின் முதன்மைக் காரணியாக மாறியுள்ளது. சமாதானத்திற்கு முன்னுரிமை வழங்கிய காரணத்தினால் இன்று சமாதானம் என்பது வீடுகளில் பயன்படுத்தும் சாதாரண சொல்லாக மாறியுள்ளது.

நாட்டிற்காக பல தியாகங்களைச் செய்ததன் மூலம் நாட்டிற்கு உறுதியான சேவைகளைத் தாம் ஆற்றியிருப்பதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி அதனை மஹிந்தராஜபக்ஷவின் அரசாங்கம் முன்னெடுத்துச்செல்ல வேண்டுமென கேட்டுக்கொண்டார். (த-9)

## நியமனம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குப் புதிய கல்விப்பணிப்பாளராக திருமதி அ.வேதநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 28ஆம் திகதி அன்று தமது கடமைகளைப் பொறுப்பெடுத்துக்கொண்டார்.

இவர் முன்பு வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்வி அபவிருத்திக்குப் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் முன்பு கடமையாற்றிய திருமதி றெஜீனா இருதயநாதன் எனபவர் தமது பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவரது இடத்துக்கே திருமதி அ.வேதநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். (த-108)

## விபத்தில் மரணம்

(சாவகச்சேரி)

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு ஆட்டோ, மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தரான பரமராஜன் காண்டீபன் (25 வயது) என்பவர் கடந்த புதன்கிழமை மரணமானார்.

மீசாலை புத்தூர்ச் சந்தியைச் சேர்ந்த இவர் இவ் விபத்தினால் கோமா நிலையில் இருந்து ஓரளவு தேறி இருந்தார் என்றும், புதன் கிழமை அதிகாலையில் திடீரென்று மரணமானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-108)

# கரவெட்டி வைத்தியசாலை நிர்மாணத்துக்கு கரவெட்டி வாசிகள் ரூபா 6 இலட்சம் நிதியுதவி

(மருதங்கேணி)

கரவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்ட கொடிவாரத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிதிசேகரிப்பில் இதுவரை ஆறு இலட்சம் சேர்ந்துள்ளது. இதில் கொழும்பு வாழ் கரவெட்டி மக்கள் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும், கனடாவில் வசிக்கும் கரவெட்டி வாசியான இ.இரஞ்சன் ஒரு இலட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளனர். ஏனைய ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா கரவெட்டி மக்களிடமிருந்து பெறப்பட்டது.

மேலும் ஐந்து இலட்சம் ரூபா நிதியை கரவெட்டி மக்களிடம் சேகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள வைத்தியசாலையை நிர்மாணிக்க சிந்தாமணி விநாயகர் ஆலயத்திடமிருந்து உரிமை பெறப்பட்ட காணிக்கு 99 வருடக் குத்தகைக்கு இரண்டு லட்சம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது இயங்கும் வைத்தியசாலைக்குக் கட்டட வசதிகள் செய்து கொடுக்க இரண்டு இலட்சம் வரை செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் அபிவிருத்திச் சபை தொிவித்துள்ளது. (த-35)

# விசா முறைகேடுகள் 59 இலங்கையர் கைது

(கொழும்பு)

விசா முறைகேடுகள் தொடர்பாக 59 இலங்கையர் கைது செய்யப்பட்டிருப்பதாக இலங்கை அமொிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு விண்ணப்பிக்கப்பட்ட 13 ஆயிரம் விண்ணப்பங்களில் சந்தேகத்துக்குரிய விண்ணப்பங்கள் மீது விசாரணை நடத்தப்பட்டன.

விசா பெறுவதற்காக போலியாக ஆவணங்களைச் சேர்த்தது தொடர்பில் 59 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 4 பேர் போலி திருமண சான்றிதழ் கொடுத்ததாகவும் 4 பேர் போலியாக விசாவுக்கு விண்ணபத்திருந்தனர் என்றும் அமெரிக்கத் தூதரகச் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

கடந்த 2004ஆம் ஆண்டு விசா முறைகேடுகள் தொடர்பாக 84 பேர் கைது செய்யப்பட்டதாக்வும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# வரவு செலவுத் திட்டத்தில் எமது யோசனைகளையும் சேர்க்குக

## ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு செலவுத் திட்ட யோசனையில் ஜே.வி.பியின் திட்டங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷாவையும், நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தரவையும் எதிர்வரும் நாட்களில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் விவசாயிகளுக்கும் நலன் தரும் விதத்தில பல சலுகைகள் அடங்கியதாக ஜே.வி.பி தயாரித்திருக்கும் யோசனைகள் வரவு செலவுத் திட்டத்தில உள்ளடக்கப்பட வேண்டியது அவசியம் எனறும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மஹிந்தவின் சிந்தனையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் அமைவது வரவேற்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிடடார். (த)

# அனுமதி அட்டை அனுப்பி வைப்பு

(கொழும்பு)

இந்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை கல்வித்திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்கிழமையளவில் தங்களது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் கல்வியமைச்சுடன் தொடர்புகொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க கேட்டுள்ளார்.

2784208, அல்லது 2784537, 278600 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது 2784422 எனற தொலைநகல் இலக்கத்துடனோ தொடர்புகொள்ளமுடியும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# ஈராக்கின் முக்கிய பகுதிகள் தீவிரவாதிகளின் பிடியில்

(பக்தாத்)

ஈராக்கில் ராமதி நகரின் முக்கிய பகுதிகளை தீவிரவாதிகள் கைப்பற்றினர். அமெரிக்கப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே அங்கு கடும் சண்டை நடைபெற்றுவருகிறது.

ஈராக்கில் சதாம் உசேனின் ஆட்சி கைப்பற்றப்பட்டதிலிருந்து அமெரிக்கப் படைகளுக்கு எதிராகவும், ஈராக்கின் புதிய அரசுக்கு எதிராகவும் சதாம் உசேனின் ஆதரவு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

தீவிரவாதிகள் தாக்குதலுக்கு இதுவரை 1700க்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் பலியாகிவிட்டனர். தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் வரை அமெரிக்கப் படைகளை வாபஸ் பெற முடியாது என்று அதிபர் ஜோர்ஜ் புஷ் திட்டவட்டமாக அறிவித்ததைத் தொடர்ந்து தீவிரவாதிகள் தங்கள் தாக்குதலை அதிகப்படுத்தியுள்ளனர்.


இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முகமூடி அணிந்த 100க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பக்தாத் அருகே உள்ள ரமாதி நகரம் மீது திடீர் தாக்குதல் நடத்தினார்கள். அங்குள்ள அமெரிக்க சாலை முகாம் மீது ரொக்கற் தாக்குதல் நடத்தினர்.

ஈராக்கிலுள்ள அல்கொய்டா இயக்கத் தலைவர் அபுசயாப் அல்சர்காவி தலைமையில் இந்தத் திடீர் தாக்குதல் நடைபெற்றது. ரமாதி நகரின் முக்கிய பகுதிகளை இந்த தீவிரவாதிகள் பிடித்தனர். அரசு அலுவலகங்களை அவர்கள் கைப்பறறிவிட்டனர். தீவிரவாதிகளிடம் வீழ்ந்த பகுதிகளை மீட்க அமெரிக்கப்படையினர் கடும் தாக்குதல் நடத்திவருகிறார்கள். ரமாதி நகரின் முக்கிய பகுதிகள் எங்கள் பிடியில் இருக்கிறது என்று தீவிரவாதிகள் துண்டுப்பிரசுரங்களை நகரம் முழுவதும் வீசியுள்ளனர். (த)



சென்னை ஐ.ஐ.டி.யில் நடந்த கம்ப்யூட்டர் மூலம் கணக்கிடுதல் சோதனை பொறியியல் அறிவியல் மாநாட்டை ஜனாதிபதி அப்துல் கலாம் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தார். அருகில் கவர்னர் சுர்ஜித் சிங் பர்னாலா.

WORLD NEWS
உலக தரிசனம்



இஸ்ரேலையும் பாலஸ் தீனத்தையும் பிரிக்கும் பிரம்மாண்டான தடுப்பு வேலியை இஸ்ரேல் அமைத்து வருகிறது. ஜெருசலேமின் புறநகர் பகுதிகளையும் பாலஸ்தீனத்தின் மேற்கு கரையையும் இந்த வேலி பிரிக்கிறது.

# இந்தியா-சீனா இடையேயான எல்லைப் பிரச்சினை விரைவில் தீரும்

(புதுடில்லி)

இந்திய-சீன எல்லைப் பிரச்சினைக்கு தர்வு காணப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங இதுதொடர்பாக மாநிலங்களவையில் சமாஜவாதி கட்சி உறுப்பினர் ஷாகித் சித்திக் கடந்த வியாழக்கிழமை பிரச்சினை எழுப்பினார். அப்போது பிரதமர் பதிலளிக்கையில், இந்திய-சீன எல்லைப் பிரச்சினை தொடர்பாக அனைத்து விசயங்கள் குறித்தும் அரசு ஆராயும். இரு நாடுகளுக்குமிடையே எல்லையை நிர்ணயம் செய்யும் பணியை சிறப்புப் பிரதிநிதிகள் மேற்கொள்கின்றனர்.

எனினும்,இதுதொடர்பாக காலவரையறை கூறமுடியாது.பேச்சுவார்த்தை நடந்து வருகின்றது. இதில் இருநாடுகளுமநியமித்துள்ள சிறப்புப் பிரதி நிதிகள் பல்வேறு கட்டங்களை தாண்டியுள்ளனர்.

சீனப் பிரதமர் அண்மையில் இந்தியா வந்தபேது ஒப்பந்தமொன்றில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. அடுத்த கட்டமாக எல்லையை நிர்ணயிப்பதற்கான அடிப்படை அம்சங்களை இறுதி செயவதற்கான வழிமுறைகளை சிறப்புப் பிரதிநிதிகள் ஆராயவேண்டியுள்ளது என்றார்.(த)

# புதிய எண்ணெய் வயல் சீனாவில் கண்டுபிடிப்பு

(பெய்ஜிங்)

பொகாய் விரிகுடா கடல் பகுதியில் புதிய எண்ணெய் வயலைக் கண்டுபிடித்துள்ளது சீன எண்ணெய் நிறுவனம். இந்தப் புதிய வயலில் 20 கோடி கன மீற்றர் எண்ணெய் இருப்பு இருப்பது தெரியவந்துள்ளது. இந்தத் தகவலை சீன எண்ணெய் நிறுவனம் கடந்த புதன்கிழமை. தெரிவித்தது.

கடந்த ஆகஸ்டில் பொகாய் விரிகுடாப் பகுதியில் உள்ள லியாவ்டாங் விரிகுடாப பகுதியில் 3143மீற்றர் ஆழத்திற்கு கிணறு தோண்டப்பட்டது. அப்போது இங்கு எண்ணெய், இயற்கை எரிவாயு பெருமளவில் இருப்பது தெரியவந்தது.

பொகாய் விரிகுடா பகுதியில் புதிதாக மொத்தம் 8எண்ணெய் வளப் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 20கோடி கனமீற்றர் எண்ணெய் மற்றும் 150கோடி கனமீற்றர் எரிவாயு இருப்பு உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

இதன்மூலம் 2010ற்குள் 3கோடி கனமீற்றர் எணணெயை உற்பத்தி செய்யமுடியும்.

இந்த ஆண்டில் மட்டும் பொகாய் விரிகுடாப் பகுதியில் 1.4கோடி கனமீற்றர் எண்ணெய்,எரிவாயு உற்பத்தி செய்யப்பட்டது. இதனடிப்படையில் நாட்டிலேயே பொகாய் விரிகுடாப் பகுதி எண்ணெய் வயல் மூன்றாவது பெரிய வயல் என்ற பெருமையை வகிக்கிறது. (த)

# இந்திய மாணவர் ஈராக்கில் கடத்தல்

(புதுடில்லி)

ஈராக்கில இந்திய மாண்வர் ஒருவரை தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச்சென்றனர்.

கனடாவில் வசிக்கும் இந்தியர் ஹர்மீத் சிங் சூடியோ 32 இவர் நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து பல்கலைக்கழகத்தில் படித்துவந்தார். சூடியோவும் அவருடன் சேர்ந்த மேலும் மூன்று வெளிநாட்டவர்களும் ஈராக்கில் அமைதி இயக்க பணிகளில் ஈடுபடும் கிறிஸ்தவ அமைதி இயக்க குழுவில் பணியாற்றி வந்தனர். இந்த நிலையில் ஹர்மீத்சிங் உட்பட நான்கு அமைதி இயக்கத் தொண்டர்களை ஈராக்கில் தீவிரவாதிகள் கடத்திச்சென்றனர்.


ஒற்றர்களாக செயல்பட்ட இரண்டு கனடா நாட்டவர்கள் ஒரு அமெரிக்கர் மற்றும் ஒரு பிரிட்டிஷ் நாட்டவரை தாங்கள் துப்பாக்கி முனையில் கடத்தி சென்றதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். (த)

# பிலிப்பைன்ஸில் நில நடுக்கம்

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்குப் பகுதியில் கடந்த புதன்கிழமை இரவு நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோளில் 5.7 என பதிவாகியது.

தெற்கு பிலிப்பைன்ஸ் பகுதியில் உள்ள மிண்டானோ தீவில் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்படும் அபாயம் இல்லை என நிலநடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர். உயிர்ச்சேதம், பொருள் சேதம் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே மூடநம்பிக்கை கொண்ட இந்த பகுதி மக்கள், நிலநடுக்கம் ஏற்படுவதைத் தடுக்க கோட்டாபட்டோ என்ற நகரில் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இந்த சம்பவத்தின்போது பலர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (த)



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ராக்பெல்லர் மையத்தில் பிரமாண்டமான கிறிஸ் துமஸ் மரம் அமைக்கப் பட்டுள்ளது. அதன்கீழ் உள்ள ஐஸ் மைதானத்தில் ஆனந்தமாய் சிலர் ஸ்கேட்டிங் விளையாடு கின்றனர்.

# இலகு ரக போர் விமானம் வெற்றிகர பரிசோதனை

தேஜாஷ்-பிவி 2 இலகு ரக போர் விமானம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இராணுவத்துக்காக தேஜாஷ் என்ற இலகு ரக போர் விமானம் பெங்களூரில் உள்ள ஏரோநாடிகல் மேம்பாட்டு ஏஜென்சியால் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே பலமுறை இது வெற்றிகரமாக பறக்கவிட்டு பரிசோதிக்கப்பட்டது. இதில் மேலும் சில மாற்றங்கள் செய்து பிவி-2 என்ற பெயரில் புதிய விமானம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் நேற்று முன்தினம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. விமானப்படை பைலட்டான விக்ரம் சிங் இதை இயக்கினார். 26 நிமிடங்கள் அவர் பறந்தார். விமானம் நலல முறையில் செயலபட்டது. என்று அவர் கூறினார். (த)

தனிமனிதர்க்கு ஒரு நியாயம் என்ற பிரிவு இருக்கும் வரையில் காட்டில் வாழும் விலங்கின் நிலையில் இருந்து இன்னும் மனிதன் முன்னேறவில்லை என்றுதான் சொல்லவேண்டும். - பெர்னார்ட்ஷா

வலம்புரி

# பயங்கொள்ளும் சூழல் மீண்டும் எழுகிறது

யுத்தநிறுத்த உடன்படிக்கை மெல்லச்சாகும் அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

நேற்று முன்தினமிரவு நீர்வேலிப் பகுதியில் இனந்தெரியாதவர்கள் சுட்டத்தில் இருவர் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதிய ஜனாபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் சமாதானத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் நிலவியதுண்டு. எனினும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப்போவதாக ஜனாதிபதி மகிந்த அறிவித்த செய்தியும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் மகிந்தவின் நடைமுறை அரசியலுக்குச் சந்தர்ப்பம் கொடுப்பதாக தெரிவித்த தகவலும் மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்தன.

எனினும் மீண்டும்மோர் யுத்த சூழ்நிலைக்கான அறிகுறிகள் யதார்த்தத்தில் தென்படுகின்றன. இனந்தெரியாதவர்கள் நடத்தும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளன.

யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருப்பதாக அரசு கூறிக்கொள்ளும் போது இத்தகைய இனந்தெரியாதவர்கள் நடத்தும் துப்பாக்கித் தாக்குதல்கள் எங்ஙனம் நடைபெறுகின்றது என்ற கேள்வி நியாயமானதே.

தமிழர் தாயகத்தில் இராணுவத்தைக் குவித்து வைத்திருக்கும் அரசின் நோக்கம் என்ன? தனித்து தமிழர் தாயகம் சிங்கள ஆட்சிபுலத்திற்குரியது என்பதற்கான ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாகவும், தமிழ்மக்கள் வந்தேறுகுடிகள், அவர்கள் இலங்கை என்ற அரசியல் எல்லைக்குள் பிரஜா உரிமை பெற்றவர்கள் அல்ல என்ற நினைப்பிலும் என்றால் அங்கு சமாதானம் என்ற பேச்சுக்கே இடமிருக்க நியாயமில்லை.

ஒருநாட்டில் வாழும் இனத்திற்கு மறுக்கப்படுகின்ற இறைமையானது சேர்ந்துவாழ்வதற்கானதல்ல. அது பிரிந்துசென்று தத்தம் அரசியல் எல்லைகளைத் தீர்மானிப்பதற்குரியதாகும்.

மாறாக தமிழ்மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கு உரிமை வழங்குவதற்காகவே இராணுவம் அங்கு குவிக்கப்பட்டுள்ளதென கூறப்படுமாயின் அதற்காக இத்துணைதூரம் தமிழ்மக்கள் வாழும் இடங்களை ஆக்கிரமிக்கவும், குடியிருப்புப் பகுதிகளில் குண்டுகளைக் கட்டிக்கொண்டு கூடாரங்களில் இருப்பதும் தேவையற்றதாகும்.

ஆக, யாழ்ப்பாண மண்ணில் இனந்தெரியாத வகையில் நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அரசு நிறுத்த நடவடிக்கை எடுப்பதுடன், உடனடியாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பதும் காலத்தின் கட்டாய தேவையாகும்.

# யானை - புலி ஒப்பந்தமென்ற பொய்ப்பிரசாரம் புஸ்வாணமானது

## திஸ்ஸ அத்தநாயக்க அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கையின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும்,தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்பு இருப்பதாக அதாவது யானை,புலி ஒப்பந்தம் இருப்பதாக அரசாங்கமும், அதனோடு இணைந்த இதர கட்சிகளும் மேற்கொண்ட பிரச்சாரங்கள பொய்யானவை என்பது உறுதியாகிவிட்டதாகக் கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்னர் எமது கட்சி மீது பல்வேறு குறறச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதாவது யானை-புலி கூட்டு ஒப்பந்தம் இருப்பதாகக் கூறினார்கள். ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய முதலிய கட்சிகள் இவ்வாறு கூறி முழு நாட்டு மக்களையும் திசைதிருப்ப முயற்சித்தன.

யானை-புலி ஒப்பந்தம் இருக்கவில்லையென்பதும் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக எமது கட்சி செயற்படவில்லை என்பதும், நாட்டு மக்களுக்கு இன்று புரிந்திருக்கும்.

கடந்த மாவீரர் தின உரையில் பிரபாகரன், ரணில் விக்கிரமசிங்க சர்வதேச வலைப்பின்னலைப் பயன்படுத்தி புலிகளை நெருககுதலுக்கு உட்படுத்தியுள்ளதாகவும், ஆயுதங்களைக் களைய முயற்சிசெய்ததாகவும் கூறியுள்ளார். இதன்மூலம் விடுதலைப் புலிகள் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் மீது எந்த அளவுக்கு வெறுப்புக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது என்றும் அவர் கூறினார்.

புதிய அரசு பதவியேற்ற பின் பொருட்கள் விலைகள் வேகமாக அதிகரித்துச் செல்லுகின்றன என்றும், எரிவாயுவின் விலை 57ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், பால்மாவின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் மஹிநத ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் மக்களுக்குக் கிடைதத நிவாரணங்கள் என்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அச்சுறுத்தலான நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (த-8)

# தமிழீழ சுகாதார சேவையினரின் நடவடிக்கையால் தொற்றுநோய் ஏற்படும் அபாயம் நீங்கியது

(கிளிநொச்சி)

வன்னி மாவட்டத்தில் உள்ள பல இடங்களில் கடந்த சில நாடகளாகப் பெய்துவரும் தொடர் மழை காரணமாக பலர் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ள போதிலும் வெள்ளத்தினால் ஏற்படக் கூடிய தொற்றுநோய்கள் பரவாமல் தமிழீழ சுகாதார சேவையினர் கட்டுப்படுத்தியுள்ளார்கள்.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் பொது இடங்களில தங்கவைக்கப்பட்ட போதிலும் உரிய இடங்களுக்குச் சென்ற தமிழீழ சுகாதார சேவையினர் அப் பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகளை கடுமையாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் சுகாதார சீர்குலைவுகள் ஏற்பட சந்தர்ப்பம அளிக்கப்பட்வில்லை.

இத்துடன் தமிழீழ சுகாதார சேவையினர் தற்காலிக மலசலகூடங்களை அமைத்து இம் மக்களுக்கு வழங்கியும் மற்றும் குடிநீரைக் கொதிக்க வைத்தும் குளோரின் இட்டும் ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளை மிகவும் கவனமாக மேற்கொண்டுள்ளார்கள்.

நீர்தேங்கக் கூடிய பொருட்கள் யாவும் அகற்றப்பட்டும் சுகாதார நடவடிக்கைகள் உரிய நோயாளர்கள் உடனுக்குடன் இனம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டமையாலும் தொற்றுநோய் அபாயத்தில் இருந்தும் பொதுமக்கள் காப்பாற்றப்பட்டுள்ளார்கள்.

தென் இலங்கையைப் பொறுத்தவரையில் பலர் டெங்கு நோய் மலேரியா போன்ற நோய்களுக்கு உள்ளாகி வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இதுகுறித்து வன்னிப்பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்களும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழீழ சுகாதார சேவையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இம் முறை நாம் தொற்றுநோய் அபாயத்தில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளோம் எனத் தெரிவிக்கின்றார்கள். (த)

# கட்டடக் கலைஞர்களுக்குப் பயிற்சி

(கொழும்பு)

சுனாமிப்பேரலையால் சேதமடைந்த கட்டடங்களை நிர்மாணிக்கும் பொருட்டு கட்டடக் கலைஞர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சர்வதேச சமூகத்திடமிருந்து 100 மிலலியன் ரூபா கிடைத்துள்ளதாக கட்டட நிர்மாண சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக வயாகலையில் கட்டடக் கலைஞருக்கான பயிற்சிநிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட நிர்மாண சங்கத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். சுனாமிப் பேரலையினால் இலங்கையில பெருமளவு சேதமடைந்த பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் பொருட்டு சர்வதேச ரீதியாக பெருமளவானோர் ஒத்துழைப்பை நல்கி வருவதாகவும் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது அவர் தெரிவித்தார். (த-9)

# ஊடகத்துறை முன்னேற்றப்படும்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் ஊடகக் கொள்கை பற்றி ஊடக தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்ளூர் தனித்துவத்தைப் பேணும் அதேவேளையில் ஊடக கலாசார சமதன்மை ஒன்றை உருவாக்குவது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமென்று ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கான புதிய பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவுவது,மாகாண ஒளிபரப்பு நிலையங்கள், புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் உட்பட ஒலிபரப்புத் துறையில் பல்வேறு மாற்றங்களைச் செய்வதற்கு தாம் உத்தேசித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய ஊடக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கி அவற்றின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கென பிறிதொரு அமைப்பை ஏற்படுத்துவதன் அவசியத்தையும அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள தனியார் வானொலி நிலையங்கள் வருமானத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு இயங்கி வருவதாகவும் அதேவேளை உள்ளூர் கலாசாரம் மற்றும தார்மீக விழுமியங்கள் சீரழிந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-9)

# ஆங்கில பாடத்தின் பெறுபேறுகளை அதிகரிக்க விசேட செயற்திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் ஆங்கிலப்பாட பெறுபேற்றை அதிகரிப்பதற்கான விசேட செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சமுதாய மீள்கட்டமைப்பு திட்டமான நிக்கொட் திட்டத்தின் மூலமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஆங்கிலப் பாடபெறுபேற்றை அதிகரிப்பதற்கான விசேட செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழ் இயங்கும் ஒவ்வொரு கல்விவலயத்திலிருந்தும் 10 பாடசாலைகள் வீதம் 24கல்வி வலயங்களிலிருந்து 240பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் சகல சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு விசேட ஆங்கில மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாட வினாத்தாளை ஒத்ததாக மாதிரி வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டங்கள் தொடர்பாக கல்விவலய கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.(த-9)

# நுளம்புத் தொல்லை

(ஊர்காவற்றுறை)

தீவுப் பகுதியில் என்றுமில்லாதவாறு நுளம்புகள் பெருகியுள்ளன. குளங்கள்,சேறுசகதிகள் வாய்க்கால்களிலிருந்து பெருமளவு நுளம்புகள் உற்பத்தியாகியுள்ளன. மலேரியா தடுப்பு இயக்கத்தினர் 'மலத்தீன்' மருந்து விசுறும வேலைகள் இன்னும் ஆரம்பிக்காததால் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. (த-72)

# பிரிவு உபசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இரண்டு வருட வதிவிடப் பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறும் 5ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களிற்கான பிரிவு உபசார விழா இன்று காலை 8.30 மணிக்கு கலாசார மன்றத் தலைவர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைககழக வணிக,முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



நாம் பந்தப்பட்டவர்கள் என்ற எண்ணம் வெறும் மாயை. நாம் இன்பம் அனுபவிக்கிறோம். நாம் துன்பம் அனுபவிக்கிறோம் என்ற எண்ணங்களும் மிகப்பெரிய கற்பனையே. உங்கள் உடலுக்குப் பின்னால் எவ்வளவு சக்தி. எத்தனை வகை ஆற்றல்கள் வேகங்கள் எல்லாம் மறைந்துள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுவாமி விவேகானந்தர்

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அடுத்த நிதியாண்டுக்கு 29 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

அடுத்த நிதியாண்டில் சந்திரிகா குமாரதுங்காவின் பயன்பாட்டிற்கென 29 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு என்ன அடிப்படையில் இடம் பெற்றுள்ளதுஎன்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நேற்று கேள்வி எழுப்பினார்.

அடுத்த வருடத்துக்கான அரசாங்க சேவை செலவீனங்கள் மற்றும் பல்வேறுதிட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு சட்டமூலத்தில் அரசியல்அமைப்பு சார் தன்மை குறித்து ஆராய்ந்த போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்திருந்த 2006 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மற்றும் அரசாங்க வருமானங்களைப் பாதுகாப்பதற்கான விசேட பாராளுமன்ற சட்டமூலத்தையும் ஆராய்ந்த போதே பிரதமர் நீதியரசர் இக் கேள்வியினை எழுப்பியுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள் 10 பேருக்காக 29 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ள வேளையில் முன்னாள் ஜனாதிபதிக்காக 29 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டமை குறித்து பிரதம நீதியரசர் நேற்று ஆராய்ந்தார்.

முன்னாள் ஜனாதிபதி டி.பி விஜயதுங்காவுக்கு 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட வேளையில் சந்திரிகா குமாரதுங்காவுக்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டமை எந்தளவுக்கு நியாயமான நடவடிக்கையாக அமையும் என்றும் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

இச்சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்ற விசாரணைகள் நேற்று நிறைவடைந்த வேளையில் அது தொடர்பான தீர்ப்பை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கவுள்ளதாக பிரதம நீதியரசர் குறிப்பிட்டார். (இ-4)

## காத்தான்குடி பிரதேச செயலாளர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எல். எம்.பலீல் (வயது-46) நேற்று நண்பகல் இனந் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது அலுவலகத்தில் வழமையான பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இலக்கமில்லாத மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேரில் ஒருவர் மறைந்திருந்து இவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ

## க.பொ.த (சா.த) மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை நிலைய அனுமதி பத்திரத்தினை பெறாத பரீட்சார்த்திகள் எதிர்வரும் 6 ஆம் திகதிக்குப் பின்னர் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அனுமதி அட்டைகளில் மாற்றங்கள் எதுவும் செய்ய வேண்டுமானால் உடனடியாக பரீட்சைத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்துமாறு பாடசாலை அதிபர்கள் வேண்டப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் இப் பரீட்சை 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (இ-4)

## வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு

(பதுளை)

பதுளை ஒடியல பிரதேச ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் திலக் ஜெயநெத்தியன் வீட்டின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5.50 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பிரதேச சபை உறுப்பினரின் வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது.

வீட்டிலிருந்த ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார். இதே வேளை இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் வாகனம் கை விடப்பட்ட நிலையில் நுவரெலியாவில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (இ-9)

## யாழ்ப்பாணத்தில் கடை எரிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரிவீதியில்அமைந்துள்ள கடையொன்றில் நேற்று இரவு இடம்பெற்ற தீவிபத்துக் காரணமாக கடை எரிந்து சாம்பலாகியது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு வந்த தீயணைப்புப் படையினர் தீயினை அணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (இ-12)

## ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு மீதான விசாரணை 2006இல்

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது வடக்கு-கிழக்கில் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல் நடைபெறவில்லை என்றும் அந்தப் பிரதேசங்களில் மீண்டும் தேர்தலை நடத்த உத்தரவிடுமாறும் கோரியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு மீது 2006 ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

வீ.ஆனந்தசங்கரி உட்பட மூவரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க உட்பட சிலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மனுதாரர்கள் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களாவர். கடந்த பொது தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய வேட்பாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் உட்பட இன்னல்கள் ஏற்படுத்தப்பட்டன என்றும் இதனால் வடக்கு-கிழக்கில் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல் நடைபெறவில்லை என்று மனுதாரர்கள் தங்களின் மனுவில் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த மனுவை விசாரணைக்கு எடுக்க அனுமதியளிக்குமாறும் வடக்கு-கிழக்கில் மீண்டுமொரு முறை தேர்தல் நடத்த உத்தரவிடுமாறும் மனு தாரர்கள் தங்கள் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதை விசாரித்த உயர் நீதிமன்றம் வழக்கின் விசாரணையை 2006 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (இ-4)

## கண்காணிப்புக் குழுவிற்கு...

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப்பிரிவினாலும் ஈ.பி.டி.பி ஒட்டுக் குழுவினராலும் சுட்டுக் கொல்லப்பட்டமை தமிழ் தேசியப் பற்றாளர்களை அழித்தொழிக்கும் நயவஞ்சக செயல் என்றும்இவ்வாறான கொலைகள் தொடர்ந்து இடம் பெறாமல் இருக்க இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 30.11.2005 ,01.12.2005 ஆகிய இரு தினங்களும் பளையிலும் கிளிநொச்சியிலும் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளரும் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவருடன் சந்திப்பை மேற்கொண்டு இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில்இடம்பெறும் யுத்தநிறுத்த மீறல்கள், மக்களை அச்சுறுத்தும் சம்பவங்கள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறியிருந்தனர்.

கடந்த மாதம் 20 திகதிக்குப் பின்னர் நீர்வேலி, நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, ஊர்காவல் துறை ஆகிய இடங்களில் இடம் பெற்ற சம்பவங்கள் பற்றியும் போர் நிறுத்த கண்காணிப்பு குழுத் தலைவருக்கு விளக்கப்பட்டது.இந்தச் சந்திப்புநடைபெற்று சில மணி நேரங்களிலேயே நீர்வேலி கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளமையை போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுத் தலைவருக்கு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரால் சுட்டிக் காட் டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

## அடுத்த வருடம்...

தொடங்குவதற்கான அரசின் எதிர்பார்ப்புகள் அரசாங்கத்தின் நிலைப்பாடு, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை ஆகியன குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் படவுள்ளது. (இ-4)

## வர்த்தகர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை அநுராதபுரம் வீதிச் சந்தியில் வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.குறித்த வர்த்தகர் ஒருவர் தமது வர்த்தக நிலையத்தில் இருந்த வேளையிலேயே இனந்தெரியாதவர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பியோடிவிட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் திருகோணமலை அபயபுரப் பகுதியைச் சேர்ந்த கே.பி.கேமசிறி என்பவராவார். உப்புவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## பூரண ஹர்த்தாலால்...

சேவைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

யாழ். குடாநாட்டில் பரவலாக நகரங்கள், சந்திகள் எங்கும் வீதித் தடைகள் போடப்பட்டு ரயர்கள் எரிக்கப்பட்டன.

நெல்லியடி, சாவகச்சேரி, ஊர்காவற்துறை, அச்சுவேலி, யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களிலும் வீதிகளில் தடைபோடப்பட்டிருந்தன. அத்துடன் ரயர்கள் எரிக்கப்பட்டு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதி, பலாலி வீதி மற்றும் ஏ-9 வீதி, காங்கேசன்துறை வீதிப்போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதமடைந் திருந்தன.

இதேவேளை யாழ். குடாநாட்டு பாடசாலைகளில் நேற்று நடை பெறவிருந்த அனைத்துப் பரீட்சை களும் பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என யாழ். கல்வித் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-04,09,108,43,37,29)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில்...

மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீதிவழியாகப் பிரயாணம் செய்த மூவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினருக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் சாவகச்சேரி, நுணாவில், யாழ்ப்பாணம், நெல்லியடி, மந்திகை, பருத்தித்துறை உட் பட குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே இடம்பெற்றதாக எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.யாழ்ப்பாணத்தில் அரசடி வீதி மற்றும் பிறவுண் வீதி ஆகியவற்றுக்கிடையில் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று மாலை 7.30 மணியளவில் இடம் பெற்ற கைக்குண்டு தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த பொது மகன் காயமடைந்துள்ளார்.

இதே வேளை சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் மீது நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு உலங்கு வானூர்தி மூலம் எடுத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவம் இடம் பெற்று சுமார் ஒரு மணி நேரத்துக்கு பின்னர் அதே காவலரண் மீது மேலும் ஒரு கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. இச்சம்பவம் காரணமாக மேலும் இரு இராணுவத்தினர் காயமடைந்த நிலையில் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு எதிர்ப்புறம் உள்ள இராணுவ முகாம் மீதும் மாலை 4.30 மணியளவில் மூன்றாவது தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சாவகச்சேரி மீசாலைச் சந்தியில் மாலை 5.30 மணியளவில் கைக்குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. இச்சம்பவத்தை அடுத்து இராணுவத்தினர் சுட்டதில் பொது மகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.


இதே வேளை சாவகச்சேரி யூனியன் சந்தி மற்றும் நகரப்பகுதியில் கைக்குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. இத் தொடர் தாக்குதல்கள் நடந்ததால் சாவகச்சேரியில் பதற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வீதிகளில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதே வேளை வடமராட்சி மந்திகை ஈ.பி.டி.பி அலுவலகம் மீதும் நேற்றிரவு 8.45 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது. இச் சம்பவத்தில் ஏற்றபட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

(இ-4,9,108,101,29,43,37)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
தனுஷ், பிரியாமணி
மற்றும் பலர் நடித்த
பாலுமகேந்திராவின்
அது ஒரு கனாக்காலம்
இசை: இளையராஜா
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.